தமிழர் தகவல்

இலண்டன்

Tamils' Information

அக்டோபர் 2005

மாத சோதிடம் உள்ளே



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

தீபாவளிக்கு நகை வாங்கியாச்சா...

இலண்டனில் தரமான தங்கத்திற்கு

Lakshmis Jewellers

276 High Street North London E12 6SA U.K

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

தமிழர் தகவல் Tamils' Information

அக்டோபர் 2005 மலர் : 03 இதழ் : 28

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." - குறள்

" வரலாறு என்னை விடுவிக்கும் "

அன்று முப்பத்தியொரு வயதேயான லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடிவெள்ளியான டாக்டர் பிடல்கஸ்ரோ நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டிலே நின்று தண்டனை பெற்றபின் உதிர்த்த வார்த்தைகள் இவை. ஈழத்தமிழர்கள் இந்த மனிதரிடமிருந்து படித்துக்கொள்ள நிரம்பவே உண்டு.

காலவோட்டத்தின் சரித்திரத்தில் நிலைக்கப்போகும் ஒரு அற்புதமான தலைவனை ஈழத்தமிழன் பெற்றிருப்பதும், அந்தத் தலைவனின் காலத்தில் வாழ்வதும் புனிதமான ஒரு பேறாகிப் போகிறது எனலாம். இந்தக் கொடை கிடைக்காத மாற்றான் பொறாமையில் தவிக்கிறான். அதுதான் உண்மை. இலங்கையில் தேர்தல் திருவிழா. சுவரொட்டிகள் எல்லாம் அவர்களை நாசப்படுத்துகின்றன. ஈழத்தமிழனுக்கு இதில் ஆர்வமில்லாவிடினும், இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகிறவர்களை நாம் அறிந்திருக்க வேண்டுமல்லவா? ஏனெனில் அந்தத் தெரிவுதான் நமது ' தெரிவை 'த் துரிதமாக்கப்போகிறது. ஆகவே அது பற்றிப்பார்ப்போமே.

அடிக்கடி குரலையும், கொள்கைகளையும் மாற்றிக் கொள்கிறவர் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி. அவரது கட்சி நிறுத்தியிருக்கும் வேட்பாளர் அவர் காலையே வாரிவிட இப்போது ஆயத்தமாகிவிட்டார். அதிரடி நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறார். சிங்கள மேலாதிக்க வக்கிரம் கொண்ட இனவாதிகளுடன் அந்த வேட்பாளர் சங்கமமாகி நிற்பது உலகறிந்த உண்மையாகிவிட்டது. அவரை நுஞ்சகங்கள் இப்போது நோர்வேயை நடுநிலையாளர் தரப்பிலிருந்து நீக்க அவரது ' பிரதமர் ' பதவியைப் பயன்படுத்துமாறு வற்புறுத்தத் தொடங்கியுள்ளார்கள். ஏற்கனவே சமாதான ஒப்பந்தத்தை மீளப்பரிசித்தல், தமிழர் தாயகக்கோட்பாட்டை நிராகரித்தல், சுனாமிக் கட்டமைப்பைத் தடுத்தல், தமிழர் என்பது ஒரு தேசிய இனக்குழுமமல்ல என்பதை நிலைநிறுத்தல், அவசியமானால் அந்நியப்படை என்பதை நிலைநிறுத்தல், அவசியமானால் அந்நியப்படை உதவியுடன் போரைத் தொடங்குதல், சமஷ்டித் தீர்வை மறுத்தல், ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு ஆயுதங்களைக் கைவிட்டபின் பேச்சுக்கழைத்தல், அப்படி வரின் இறுதித் தீர்வு பற்றியே பேசுதல், இப்படி அத்தனை நிபந்தனைகளுக்கும் அம்மையாரின் வேட்பாளர் அடிபணிந்து சரணாகதியாகிவிட்டார். எது நடந்தாலும் பதவி மட்டும் பெற்றுவிட வேண்டுமென்ற அதிகார ஆசை அவரை ஆட்டுவிக்கிறது. இதுவரை நடந்து முடிந்த இலங்கை அரசியல் நிலவரங்களை இவர் அறிந்திருக்காதவராகவே செயற்படுகிறார். இப்படி ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் நிற்பது ஒரு ' கின்னஸ் ' சாதனை. உலக நாடுகளில் (இந்தியாவைத் தவிர) உள்ள அரசியல் தலைவர்களிடம் இவருக்கு எவ்வித அறிமுகமுமில்லை. ஆட்சியில், அதிகாரமற்ற ' பிரதமர் ' பதவியில் எப்படியோ சிலகாலம் இருந்திருக்கிறார் என்பதுதான் ஒரே தகுதி.

மற்றவர் வித்தியாசமானவர். எவரையும் எடுத்தெறிந்து பேசாமல் இணக்கத்துக்கு இசைபவர்போல் நடிக்கவல்லவர். அவரது சகாக்கள் அரசியலில் பலே கில்லாடிகள். எந்த ஓடையில் எவ்வகைத் தூண்டில் போட்டு எந்த மீனைப் பிடிக்கலாம் என்பதில் தேர்ந்தவர்கள். கைகோர்த்துக்கொண்டே எப்படிக் காலை வாரலாம் என்பது அவர்களுக்கு அத்துப்படி. கருணா விவகாரம் அதற்கு ஒரு சான்று. அவரது பேச்சுக்கள் அமைதியாக இருக்கும். நன்கு திட்டமிட்டதாக இருக்கும். ஆழ்ந்த அரசியல் தெரிவுபோன்று தென்படும். உலக அரங்கில் பெயர் வாங்கி பெரிய தலைமைக்கு வரவேண்டுமென்று திட்டமிட்டு வளர்க்கப்பட்டவர். கண்ணியமான ' கனவான் ' உருவம். ஆயினும் உதட்டுக்கும் உள்ளத்துக்கும் உள்ள வேறுபாட்டை ஒரு சிலராலேயே உணர முடியும். அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் சமகாலத்தில் ' சாமரை ' வீசும் சாமர்த்தியசாலி. இலங்கையின் அரசியல் அநர்த்தங்கள் பலதுக்கு அவரது கட்சியே அடித்தளமிட்டது என்பதை அறியாத தமிழன் முட்டாளே. 1983, 1987 அதற்கு உதாரணம்.

ஒருவர் ஒற்றையாட்சியுள் தீர்வு என்கிறார். அடுத்தவர் சமஷ்டி பற்றி பேசுகிறார். ஒற்றையாட்சியாளர் ஜனாதிபதியானால் உடனடியாகச் சில மாற்றங்கள் வரலாம். சமஷ்டித் தீர்வு பற்றிப் பேசுகிறவர் ஜனாபதியானால் இன்னும் சில வருடங்கள் பே சிப்பேசியே மரம் நடலாம். தண்ணீர் விடலாம்.

ஆக, எப்படியாயினும் இலங்கையில் எந்தக் காலத்திலும் ஆபிரகாம் லிங்கன்களோ - அப்துல்கலாம்களோ ஜனாதிபதியாக வரப்போவதில்லை என்பது தெளிவானது. ஒருவர் ' அதிரடி ', மற்றவர் ' அணைப்படி ' இதுதான் வேறுபாடு. நாம், தமிழர்கள் இவர்கள் எல்லோராலும் பாதிக்கப்பட்டவர்கள். தென்கிழக்கு ஆசியாவில் ஒரு புதிய ' கியூபா 'வை எங்கள் வாழ்நாளில் பார்க்க ஆசைப்படுகிறவர்கள் அதற்கு இத்தேர்தல் வழிவிடுமா ?

- ஆசிரியர்

முகவரி :

41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

வங்கி :
H.S.B.C
A / C Name :
TAMILS' INFORMATION
SORT CODE : 40-35-30
A / C No.: 81437100

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

உ

சிவமயம்

சீர்வளர்சீர் தவத்திரு பேரூர் ஆதீனம் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் பவள விழாவினையொட்டி இலண்டன் மாநகர் லூஷ்ஹாம் சிவன் கோயில் அறங்காவலர் அவையின் சார்பில் அளிக்கப்பெற்ற தமிழ்ப் பாமாலை.

இடம்: பேரூர் ஆதீனம் — நாள்: 30-09-2005

அன்புச் சிவமாக ஆற்றல் வடிவாகத் தோன்றியவர்
என்பும் உருக்கும் ஏற்றம் பலவாகத் தமிழ்வழியில்
இன்பம் பெருக்கி அகம் விளைக்கும் அருச்சனையை
அன்பர் அனைந்திட ஆக்க வழிகண்ட தலைமகனார்.

பெருகவரும் அடியார்தம் உளந்தவழும் வீரசைவர்
அருமையுடன் தமிழன்னை தலைநிமிர உலகெங்கும்
பருப்பொருளாய்ப் பலவுலகம் படைத்தளித்த சிவனியத்தை
நறும்பொருளாய் நாவினிக்க நாவரசர் எனத்தந்தார்.

முத்தமிழும் முழுதுணர்ந்த வித்தகத்தின் வேந்தரவர்
இத்தரையில் சிவம்மணக்கத் தமிழ்சிறக்க வலம்பெற்றார்
எத்துணையும் தமைமறந்த தகைசான்ற அருள்வள்ளல்
பத்திமையால் பாடல்பெறும் பல்புகழும் நிறுவியவர்.

பதியாகப் பசுவாகப் பாசமாக முப்பொருளும்
நதியாக விளங்கவரு நன்காஞ்சிக் கரைதவழும்
பதியாக நிலைக்கவரு பேரூரின் கலைக்கழக
நிதியாக விளங்குகின்ற இராமசாமி அடிகளார்.

அன்பாலே ஆட்கொண்ட அடியார்தம் மனமன்றில்
கண்ணுதலான் கடைக்கண்ணின் காட்சியுடன் மாட்சிபெற
பண்ணிறைந்த தமிழ் வழியில் வழிபாடு வெற்றிபெற
எண்ணிறந்த அடியார்தம் மாநாடு படைத்திட்டார்.

உலகெங்கும் அடியார்தம் உளம்மணக்கச் சென்றுவந்த
அலகில்புகழ் சாந்தலிங்கர் அருள்வழியில் சிவம் மணக்கப்
பல்லுயிரும் பயன்பெறவே பைந்தமிழர் சிவசமயம்
பல்லூழி வாழும் வகை வலம்பெறவே செய்துவந்தார்.

அவமடையா நல்வழியில் அனைவோரும் வாழ்ந்திடவே
சிவம் பெருக்கும் இலண்டன் வாழ் சிவனடியார் உளம்மகிழ
சிவமாகிச் சிந்தையெலாம் நலமாக நல்பெறவே
உவக்கின்ற உமதருளைப் போற்றிசொல்லி வாழ்த்துரைப்போம்.

அண்டரெனத் திரிவிட்ட அயலார்தம் ஊரகமாம்
இலண்டன் மாநகரத்தின் அண்ணாமலை ஈசனுடன்
வண்டறியா நறுங்கோதை உடனமர்ந்த திருக்கோயில்
பண்டறிந்த பக்தி நல அடியார் தம் உளம் அமர்ந்தீர்.

எற்றைக்கும் நும்வழியில் யாம் தொடர அருள் வேட்டோம்
கற்றைவார் சடைக்கரந்த கண்டனார் திருவடியே
பற்றும் மேல் கொண்டதுந்தன் தமிழ்ச்சைவக் காதலாலே
எற்றைக்கும் ஆட்பட்டோம் ஏற்றருள்க எம்தலைவ.

சிவன் கோவில் அறங்காவல் குழு சார்பில்

டாக்டர் சி சோமசேகரம் — தலைவர்
வி.கணேசமூர்த்தி — செயலாளர்
தி.அருள்தாஸ் — பொருளாளர்
4A Clarendon Rise, Lewisham London SE13, 5ES Tel : 0208 318 9844



தமிழ்நாடு பேரூர் ஆதினம் **கயிலை குருமணி சீர் வளர் சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**
அவர்களின் முத்துவிழா நிகழ்ச்சி 1.10.2005இல் கோவை, அவினாசிலிங்கம் சிற்றம்பலம் மண்டபத்தில்
நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்

தமிழ்நாட்டில் சைவக்கோவில்களின் கருவறையில் தமிழைக் கொண்டு சென்ற பெருமை இவருக்கே உரியது.
உலக நாடுகளுக்கு சென்று சைவ மாநாடுகளை நடத்தி சைவத்தை பரப்பியதில்
ஆர்வம் காட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது

பேரூர் ஆதினம் அவர்களின் முத்துவிழா நிகழ்ச்சியில் (01.10.2005) லூசியம் சிவன் கோயில் அறங்காவல் குழு செயலாளர் வி. கணேசமூர்த்தி அவர்கள் வணக்கவுரை ஆற்றியபோது எடுக்கப்பட்ட படம்



பேரூர் ஆதினம் அவர்களின் முத்துவிழா நிகழ்ச்சியில் (30.09.2005) இலண்டன் சைவக் கோவில் ஒன்றியத்தை ஆரம்பித்த திரு. நா. சச்சிதானந்தம் அவர்களுக்கு அடிகளார் பொன்னாடைப் போர்த்தி மரியாதை செய்தபோது எடுக்கப்பட்ட படம்

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

Prime Food & Wine

News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables

மனங்கவரும் மளிகைச்சாமான்கள், மென்பானங்கள்,
மதுபான வகைகள், பழங்கள், மரக்கறி வகைகள், மீன்,
இறைச்சி என எல்லாவற்றிற்கும் குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப் பெற எமமை நாடுங்கள்

118, Tooting High Street London SW 17 0RR
Tel : 020 8682 3777

வோல்த்தம்ஸ்ரோவில்

Kumarans
குமரன்ஸ்
TEXTILES

136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444, 8530 3033
Fax : 020 8521 9444

New Mot Station Open !

CAPITAL AUTOS LTD.

- Fully equipped M.O.T. & accident repair centre
- Insurance repairs welcome
- Recovery Service
- Approved insurance repairs
- Courtesy vehicle available For most repairs
- Professional friendly service and advice
- Collection & deliver within the local area

BMW MERCEDES
VAUXHALL
HONDA
VOLKSWAGEN
NISSAN Ford

£ 10 OFF
Your M.O.T !

Hurry - Limited Offer !

BASED ON CURRENT M.O.T FEE OF £42.10 • OUR VOUCHER PER CAR ONLY

இவர்களின்
விளம்பரத்தை

ttn
IBC
வானொலி

தொலைக்காட்சியில்
கேளுங்கள்

Accident Repair Centre &
General Services &
Repairs to all
Makes and Models

51A Milton Avenue
East Ham
London E6 18G
Tel : 020 8470 4789
Fax : 020 8472 2147
www.capitalauto.com

இலண்டனில் எந்த இடத்தில்
இருந்தாலும் உங்கள் வாகனத்தை திருத்த
வேண்டுமானாலும் நீங்கள் செல்ல
வேண்டிய இடம்

Reg : _____
Model : _____
Name : _____
Tel : _____

நட்புக்காலம்

சேர்ந்து நிழல்படம்
எடுத்துக் கொண்டு
அடிக்கடி மடல்
எழுதுவதாகச்
சொல்லிக் கொண்டு
பிரிகிற நட்பின் வலியை
மறைத்துக்
கொள்வதற்காகத்தான்
துணைவியிடமும்
பிள்ளைகளிடமும்
பேத்திகளிடமும் கூட
சிரிக்கச் சிரிக்கப்
பேசுகிறார்கள்
இவர்கள்

– கவிஞர் அறிவுமதி

பாரதி

" பைந்தமிழ்த் தேர்ப்பாகன் அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை !
குவிக்கும் கவிதைக்குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன் ; புதிய
அறம்பாட வந்த அறிஞன்.....! "

– பாவேந்தன் பாரதிதாசன்

பரிதாபம் !

சிறகு முளைத்ததும்
பிரிந்துவிடப் போகிற
குஞ்சுக்கு இரை தேடி
இப்படித் தவிக்கிறாயே
பறவையே !
பரிதாபப்பட்டாள் கிழவி
முதியோர் இல்லத்திலிருந்து

– ஆர் சேஷாத்திரி

ரகசிய மலர்கள்!

இந்த மாலையில்
வீடு திரும்பும் நீ
உன் வீட்டிற்கான
பாதை
துவங்கும் புள்ளியில்
உன் தலையிலிருந்து
மலர்களை
விடுவிக்கத் துவங்குகிறாய்

– மனுஷ்ய புத்திரன்

நிலப்பிரிவினை

மட்டக்களப்பும் யாழ்நகர் மண்ணும்
மரபில் வேறுபட்டவையென்றொரு
குட்டித் தலைவன் குழப்புவானங்கே...
குன்றஞ் சூழ்ந்த மலைநாட்டானை
திட்டுவான் ஒரு சிறுமகன்... மன்னார்
திருமலை எனச் செந்தமிழ்க் கூட்டம்
எட்டுப் பத்தாய்ப் பிரிந்தது மாற்றான்
இருந்த களத்தில் எரிந்தது நெஞ்சே !

– கவிஞர் காசி ஆனந்தன்

மாதமிரு திருக்குறள் கற்போம்

பொறையுடைமை

" துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோக்கிற் பவர் " *(குறள் : 159)*

செருக்கால் எல்லை கடந்து நடந்து கொள்பவர்கள் தம் வாயிலிருந்து வரும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர், உலகப் பற்றைத் துறந்தாரைவிடத் தூய்மை உடையவர் ஆவர். உலகத்தைத் துறப்பதை விட இன்னாத கடுஞ்சொற்களைப் பொறுப்பதற்கு மிகுந்த மனவலிமை வேண்டும்

" உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற்பின் " *(குறள் : 160)*

உண்ணாமல் உலகைத்துறந்து தவம் செய்பவர்கள் பெரியவர்கள். ஆயினும் அவர்கள் பெரியாராவது பிறர் சொல்லும் கடுஞ்சொல்லைப் பொறுப்பவர்களுக்குப் பின்பேயாம்.

இந்த மண்ணின் மூத்த தமிழ் மறவன் முத்து விழா காணும்

திரு சின்னப்பு மகரசிங்கம்

பெரிய பிரித்தானியாவில் கடந்த நாற்பத்திமூன்று ஆண்டுகளாக வாழ்ந்துவரும் திரு மகரசிங்கம் அவர்கள் ஆயிரம் பிறைகண்ட மூத்த தமிழராவார். இந்த மண்ணில் வாழுகின்ற இலங்கைத் தமிழர்களின் உரிமைக்கான அமைப்புகளை உருவாக்கியதுடன் அப்போராட்டங்களைத் தலைமைதாங்கி நடாத்தியவர் இவரே. எழுபதுகளின் ஆரம்பத்தில் இலங்கையில் தமிழர்களின் உரிமைக்குரல் ஓங்கி ஒலித்த வேளைகளில் இங்கும் அவற்றிற்கு ஆதரவான அமைப்புக்களை உருவாக்கியதுடன் அதற்கு ஆதரவான போராட்டங்களை அன்று மாணவர்களாக வந்த இளைஞர்களை இணைத்தும் தேவையேற்பட்ட வேளைகளில் தனிமனிதனாகவும் நடாத்தியவர்.

மே மாதம் 12ம் திகதி 1925ம் ஆண்டு மாணிப்பாயில் பிறந்த இவர் மாணிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர். கல்லூரியின் சிறந்த உதைபந்தாட்ட வீரரான இவர் யாழ்மாவட்டத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்தவர். கல்லூரின் துடிகள வீரரான இவர் பல வெற்றிக்கிண்ணங்களுக்குச் சொந்தக்காரர். மாவட்ட, தேசியப் போட்டிகளில் கல்லூரியின் சார்பில் கலந்து கொண்டவர்.

தமிழ்மக்களின் விடுதலைக்போராட்டங்களிற்கு குறிப்பாக மனித உரிமைப் போராட்டங்களிற்கு இங்குள்ள அரசியலாளர்களின் தொடர்புகளை ஏற்படுத்தியவர் இவரே. குறிப்பாக இந்த மண்ணின் பிகச்சிறந்த மனித உரிமைவாதிகளில் ஒருவரான லிபரல் கட்சி தலைவர்களில் ஒருவரான பிரபு ஏவ்விற (Lord Avebury) அவர்களின் தொடர்பையும் ஆதரவையும் எம்மவர்க்கு ஏற்படுத்தித் தந்தவர் திரு மகரசிங்கம் அவர்களே.

ஆயிரம் பிறை கண்ட இந்த பெரியாரின் படம் அட்டையை அலங்கரிக்கிறது

சி. நாகலிங்கம்



செல்வி சிறினிவாசன் சம்யுக்தாவின் முதலாவது பிறந்த தினம் ஒகஸ்ட மாதம் நடைபெறுகின்றது. வாசகர்களே உங்கள் குழந்தைகளின் படமும் இந்த இடத்தை அலங்கரிக்க தமிழர் தகவலுக்கு அனுப்பி வைக்கலாமே !

MARKANDAN & SHARMA
Solicitors & Administrators for Oaths
M. Markandan LL.B
BOW BUSINESS CENTRE 153-159 BOW ROAD
LONDON E3 2SE
TEL : 020 8981 5330 FAX : 020 8981 5350
MOBILE : 07956386576

NATHAN & CHELVA
Solicitors
M. Markandan LL.B
169 TOOTING HIGH STREET TOOTING
LONDON SW17 0SY
TEL : 020 8672 1800 FAX : 020 8672 0105
MOBILE : 07956386576

AFFORDABLE RATES ! We are Open on Saturdays
Email : markandan@mssolicitors.com

CONVEYANCING SPECIALIST
Fast, Efficient and Friendly services in
- ✓ Residential Conveyancing
- ✓ Commercial Conveyancing
- ✓ Re - Mortgages
- ✓ Liquor Licenses
- ✓ Company Registration

We Win No Fee Basis
Employment Law
Personal Injury

IMMIGRATION SPECIALIST
Free Initial Consultation on all Immigration matters
- ✓ Immigration / Asylum
- ✓ Police station visits
- ✓ Overseas Work Permits
- ✓ Working Holiday Maker visa
- ✓ Entry Clearance Appeals
- ✓ Sponsor Letters
- ✓ Power of Attorney
- ✓ Translations / Unmarried Certificates

LinkAIR

Travels Limited

ATOL PROTECTED

IATA 91-2 5704 0

SriLankan

Special Fares to : Colombo, Madras, Singapore, Canada

We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO

361 London Road, Croydon, Surrey CRO 3PB

Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579

இலண்டன் மாநகரில்

Galaxy News

உங்களுக்குத் தேவையான
விரும்பிய நூல்களை ஓடருக்கு
உங்கள் வீட்டுக்கு அருகாமையில்
உள்ள தமிழ்க் கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு

Mr. K. Alagan

GALAXY NEWS

84, Brooks Croft Road
London E17 4JR
Tel : 07958 360 176
Fax : 020 8527 2324



Mierra Jewellery Mart

Gems & Jewellery

34 London Road Tooting London SW 17 9SP
Tel : 208 648 7750 www.meera_jewellery.com

தங்கம் வாங்கும்பொழுது
தங்கம் தெரிந்தவர்களிடம்
வாங்குங்கள்

பழைய தங்கத்தில் புத்தம்
புதிய நகைகள் செய்து கொள்ள,
அதிர்ஷ்ட நவரத்தின கற்களை
நியாய விலையில் பெற்றுக்கொள்ள,
உங்களுக்குத் தேவையான
22ct சிங்கப்பூர் நகைகளை
நியாய விலையில்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

MIERRA JEWELERY MAART

ஒப்புக் கொள்ளும் குணம்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

விக்கிரம சோழன் என்று ஒரு மன்னன் இருந்தார். அவர் ஒருநாள் மாறுவேடம் போட்டுக் கொண்டு நகர் வலம் வந்தார். இப்படி உருவத்தை மாற்றக் கொண்டு ஊருக்குள் நடந்த உண்மை நிலவரங்களை அறிந்து கொள்வது அன்றைய மன்னர்களின் ஒரு முக்கியமான கடமையாக இருந்தது. இன்றைக்குச் சிறைச்சாலைக்குப் போய் சோதனை செய்ய வேண்டும் என்று புறப்பட்டார்.

அங்கே இருக்கிற கைதிகளின் நிலமை எப்படி இருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும் என்பது அவரது நோக்கம்.

எனவே அந்தப் பக்கம் போனார்.

அங்கே பலவகையான கைதிகள் அடைப்பட்டுக் கிடந்தனர்.

அவர்களில் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு விசாரித்தார்.

முதலில் ஒருவனைப் பார்த்தார்.

'' நீ எப்படி இந்த இடத்துக்கு வந்து சேர்ந்தாய்? '' என்று விசாரித்தார்.

'' நான் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தேன். அந்த வீட்டைக் காலி பண்ணச் சொன்னாங்க. வேற வீடு கிடைக்கல்லே. அதனால காலி பண்ணாமே இருந்தேன். அதுக்காக என் பேர்ல போலீஸ் கேஸ் போட்டு ஒரு வருஷம் உள்ளே தள்ளிபுட்டாங்க. ''

அடுத்தவனைக் கேட்டார்.

'' என் பேர்ல ஒரு தப்பும் இல்லங்க. ஒரு நான் தெருவுல நான் நடந்து போய்க்கிட்டிருந்தேன். வழியில ஒரு தங்கச் சங்கிலி கிடந்தது. அனாதையாக் கிடந்தது. அதனால அதை நான் எடுத்தேன். விக்கிறதுக்காகப் போனேன். அங்க என்னைப் பிடிச்சிக்கிட்டாங்க. திருடினேன்னு சொல்லி தண்டனையும் கொடுத்துட்டாங்க. ''

மன்னர் அடுத்தவனைக் கூப்பிட்டு விசாரித்தார்.

'' நீ எப்படி ? ''

'' ஐயா... எங்க ஊர்ல கணக்கு வழக்குப் பார்த்துக்கிட்டு ஒரு ஆள் இருந்தார். அவரு அடிக்கடி என்கிட்ட ஏதாவது காசு வாங்கிக்கிட்டே இருப்பார். நானும் அப்பப்ப கையில கிடைச்சது எதையாவது குடுத்துக்கிட்டேதான் வந்தேன். ஒரு சமயம் கேட்டாரு. கையில காசு இல்லேன்னு சொன்னேன். அவருக்குக் கோபம் வந்திட்டுது. அன்னிக்கு ராத்திரி அவர் வீட்டு வைக்கோல் போர் பத்தி எரிஞ்சிட்டது. அதை நான்தான் கொளுத்தினேன்னு புகார் கொடுத்துட்டாரு. எல்லோரும் நம்பிட்டாங்க. அதனால நான் இங்க வர்றாப்பல ஆயிட்டுது. ''

மன்னரும் சளைக்காமல் இன்னும் பலரையும் விசாரித்துக் கொண்டே போனார்.

அடுத்த கைதி சொன்னான் :

'' ஐயா... நன் வேற ஒண்ணும் பண்ணலே. ஒரு சின்ன கோயில் கட்டலாம்னு நினைச்சு பல பேருக்கிட்ட நன்கொடை வசூல் பண்ணினேன். பணம் கொடுத்தவங்களெல்லாம் இன்னொண்ணையும் கொடுத்துட்டாங்க. அதாவது எம்பேர்ல புகாரையும் கொடுத்துட்டாங்க. வசூல் பண்ணின பணத்தையெல்லாம் சாப்பிட்டுட்டேன்னு சொல்லி என்னை இங்க கொண்டு வந்து அடைச்சிப் போட்டிருக்காங்க. ''

இப்படி எல்லோருமே தான் ஒரு தவறும் செய்யவில்லை என்றும், 'அநியாயமாகச் சிறையில் கொண்டுவந்து அடைச்சி வச்சிட்டாங்க' என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

மன்னர் கடைசியாக வேறு ஒரு கைதியைச் சந்தித்தார்.

' நீ என்ன காரணத்துக்காக ஜெயிலுக்கு வந்தே ? ' என்று கேட்டார்.

அவன் சொன்னான் :

'' ஐயா... நான் ரொம்ப ஏழை. எனக்கு ஏழு பிள்ளைங்க. வயசான அம்மா அப்பா இருக்காங்க. வேலை செஞ்சும் போதுமான கூலி கிடைக்கல. பல சமயம் வேலையும் கிடைக்கிறதில்லை. பசிக் கொடுமை தாங்க முடியல. அதனால செய்யக் கூடாத ஒரு காரியத்தைச் செய்துட்டேன். ஒரு செல்வந்தர் வீட்டில திருடிட்டேன். திருடுவது பெரிய குற்றம். புத்திகெட்டுப் போயி அப்படி நடந்துக்கிட்டேன். அதனால பிடிபட்டேன். நியாயப்படி எனக்கு 3 வருஷம் சிறைத் தண்டனை கிடைச்சது. அதனால நான் இங்க வர்றதுக்கு யாரும் காரணமில்லை. நான்தான் காரணம். செய்த குற்றத்தை நினைச்சி தினமும் அழுதுக்கிட்டிருக்கேன். '' என்றான் அந்த ஆள்.

மன்னர் உடனே அதிகாரியைக் கூப்பிட்டார். அவர் வந்து நின்றார். மன்னர் உத்தரவிட்டார்.

'' இத பாருங்க... இங்க வந்திருக்கிறவங்க யாருமே ஒரு குற்றமும் பண்ணாதவங்க. இந்த ஒரு ஆள் மட்டும்தான் குற்றம் பண்ணினவன். நல்லவங்க பல பேரு இருக்கிற இந்த இடத்தில ஒரு பொல்லாதவன் இருக்கப்படாது. அதனால இவனை உடனே விடுதலை செஞ்சி வெளியே அனுப்பிடுங்க. ''

உத்தரவு நிறைவேற்றப்பட்டது.

உள்ளே இருந்தவன் வெளியே வந்துவிட்டான்.

குற்றத்தை ஒப்புக் கொள்ளுதல் என்பது ஒரு பெரிய குணம். அதற்குத் துணிவு வேண்டும். மனப்பக்குவமும் வேண்டும்.

இவை இரண்டும் உள்ள ஒருத்தர் ஒரு ஜெயிலில் கம்பி எண்ணிக் கொண்டிருந்தார். பக்கத்திலிருந்தவர் கேட்டார்.

'' ஏன் அண்ணே... நீங்கதான் வெளிப்படையாப் பேசுறீங்க. உங்களுக்கு ஏன் இந்த நிலமை ? ''

அதற்கு அவர் சொன்னார். '' தம்பி நான் எந்த பாவமும் பண்ணல... ஒரு நாள் என் செலவுக்கு 5000 ரூபாய் தேவைப்பட்டது. அதுக்காக வேற ஒண்ணும் நான் பண்ணல. வீட்டிலிருந்துதான் அதை எடுத்துக்கிட்டேன். அது ஒரு தப்புன்னு சொல்லி என்னை ஜெயில்ல தள்ளப்புட்டாங்க. ''

'' ஏன் அண்ணே... நம்ம சொந்தச் செலவுக்கு வீட்டிலயிருந்து பணம் எடுக்கிறது கூடத் தப்பா ? ''

'' ஆமாம் தம்பி. அப்படித்தான் சொல்லுது சட்டம். ஏன்னா... நான் பணத்தை எடுத்தது எங்க வீட்டில இருந்து இல்லே. எதிர்த்த வீட்டிலிருந்து. ''

குழந்தை மனம்

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் திறமை வாய்ந்த ஒரு மாணவியை ஆசிரியை போட்டிக்கு அழைத்துச் சென்றார். அந்த மாணவிக்கு ஒரு போட்டியில் தங்கப் பதக்கம், இன்னொன்றில் வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. மூன்றாவது போட்டியில் அம்மாணவி ஜெயிக்கும் வாய்ப்புகள் குறைவாகத் தோன்றியதால் ஆசிரியை அந்த மாணவியை இது போதுமே என்றார். தோற்றால் மாணவிக்கு வருத்தம் ஏற்படக்கூடாது என்று ஆசிரியை நினைத்தார். ஆனால் அந்த மாணவி விடாப்பிடியாகப் போட்டியிட்டாள். ஆசிரியை நினைத்தபடி ஒரு தாமிரப் பதக்கம் மட்டுமே கிடைத்தது. ஆசிரியை மாணவியைச் சமாதானப்படுத்த எண்ணி அவள் அருகில் சென்றால், அந்த மாணவி மிகுந்த மகிழ்ச்சியுடன் டீச்சர் எனக்கு இதுதான் வேண்டியிருந்தது இப்போது எனக்கு இது கிடைத்து விட்டது. என்னிடம் மூன்று வகை (Gold, Silver, Bronze) பதக்கங்களும் இருக்கின்றன பார்த்தீர்களா என்று பெருமைப்பட்டாள். வாழ்க்கையில் எப்படி சந்தோஷப்படுவது என்று நமக்குக் குழந்தைகள் கற்றுக் கொடுக்கிறார்கள்.

— சொன்னவர் : நிவேதிதா

தமிழ்நாடு பேரூர் ஆதினம் கயிலை குருமணி சீர் வளர் சீர் சாந்தலிங்கம் அடிகளார் முத்து விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரியாதை செய்தார்கள். இலண்டனில் இருந்து வந்த டாக்டர் T சிறீஸ்கந்தராசா குடும்பத்தினர் 5 ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்ததாக விழாவின் போது அறிவிக்கப்பட்டது. இது இலண்டன் வாழ் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செயலாக இருந்தது.

குறுகத் தரித்த குறள்

சுப. வீரபாண்டியன்

''அறத்திற்கே யன்புசாற் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை'' (76)

என்னும் குறள், நம்மில் பலருக்கு நன்றாகத் தெரிந்த ஒன்றே. 'அன்புடைமை' என்னும் அதிகாரத்தின் கீழ் வரும் இக்குறளுக்கான பொருள் குறித்த விவாதம் இன்னும் நிறைவடையவில்லை என்றே கூற வேண்டும்

'' அறத்திற்கு மட்டுமே அன்பு துணை செய்யும் என்று அறியாதவர்கள் கூறுவர்; மறத்திற்கும் அதுதான் துணையாக உள்ளது'' என்பது, பொதுவாக அறியப்படும் கருத்து. எனினும், இக்குறளில் இடம் பெற்றுள்ள 'மறம்' என்னும் சொல் எந்தப் பொருளைக் குறிக்கின்றது என்பதுதான் இங்கு எழும் வினா.

மறம் என்பதற்கு வீரம் என்பதே நேர்ப்பொருள். ஆனால் இங்கு அறத்திற்கு எதிர்ச்சொல்லாக ஆளப்பட்டிருப்பதால், பாவம், தீமை ஆகிய பொருள்களையும் கொள்ள வாய்ப்புண்டு.

' எடுப்பது ' என்னும் சொல்லுக்குப் பொதுவாக வழங்கப்படும் பொருள் வேறு. ஆனால், மழை பற்றிய ஒரு குறளில் ' கெடுப்பதூஉம் ' என்னும் சொல்லுக்கு எதிர்ச் சொல்லாக ' எடுப்பதூஉம் ' என்னும் சொல் ஆளப்படும் வேளையில், அங்கு அச்சொல்லுக்கு ' வாழ வைப்பதும் ' என்று பொருள் கொள்ளப்படும். அவ்வாறே, அறத்திற்கு மாற்றாக இங்கு மறம் கையாளப்படும்போது மறத்திற்கும் என்பதற்கு தீமைக்கும், பாவத்திற்கும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

இங்குதான் குழப்பம் ஏற்படுகின்றது. ' அன்பின் வழியது உயிர்நிலை ' என்னும் அளவிற்கு அன்பை உயர்த்திக் கூறும் வள்ளுவர், ' தீமைக்கும் அன்பு துணை ' என்று எவ்வாறு கூறியிருப்பார் என எண்ணி நாம் குழம்புகின்றோம்.

உரையாசிரியர்களாகிய அறிஞர்களும் குழம்புகின்றனர். மணக்குடவர், இளம்பூரணர் போன்ற பழம்பெரும் உரையாசிரியர்களும், மு. வரசராசனார் போன்ற இன்றைய உரையாசிரியர்களும், மறம் என்பதற்கு வீரம் என்றே பொருள் உரைக்கின்றனர்.

வீரம் பெறுவதற்கு, அன்பும், காதலும் துணை செய்யும் என்பது உண்மைதான். ' கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்,மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம் ' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

பரிமேலழகர் தரும் விளக்கம் வேறு விதமாக உள்ளது. '' ஒருவன் செய்த பகைமை பற்றி உள்ளத்து மறநிகழ்ந்துழி, அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்பு செய்ய அது நீங்குமாதலின், மறத்தை நீக்குதற்குத் துணையாமென்றார் '' என்பது அவருடைய உரை. இவ்வுரை சற்றுச் சுற்றி வளைத்துப் பொருள் காண்பதாக உள்ளது. பகைவன் மீதுள்ள சினத்தையும், அன்பு கொண்டுதானே நீக்க முடியும். எனவே மறத்திற்கும் அன்பு துணையாகின்றது என்கிறார் அவர்.

'' ஒருவர்பால் உள்ள அன்பினால், மற்றவர்க்குத் தீமை செய்வதற்கும் அன்புதானே துணை செய்கிறது. அதனால், மறத்திற்கும் அஃதே துணை '' என்பது பெரும் புலவர் வி.பொ. பழநிவேலனார் தரும் பொருள்.

அறிஞர் வ. சுப. மாணிக்கனார் தரும் உரையோ முற்றிலும் புதுமையாக உள்ளது. '' அன்பு சார்பு என்பவறியார் '' என்னும் தொடரை, ' என்ப + அறியார் ' என்றும் பிரிக்கலாம், என்ப + வறியார் என்றும் பிரிக்கலாம். இரண்டிற்கும் தமிழ் இலக்கணத்தில் இடம் உள்ளது. இரண்டாவது வகைப் பிரிப்பு முறையை எடுத்துக் கொண்டு, '' வறியவர்கள் தங்கள் குடும்பக் காப்பின் பொருட்டுச் செய்யும் தீய செயலுக்கும் அன்பே அடிப்படையாம் '' என்று பொருள் கூறுகின்றார் வ. சுப. இங்கே மறம் என்பதற்குத் தீய செயல் என்று பொருள் கொள்ளப்பட்டிருப்பினும், ஏழை, எளிய மக்கள் வறுமை காரணமாகவும், தங்கள் குடும்பத்தினர் மீது கொண்ட அன்பு காரணமாகவும் செய்யக் கூடிய தீய செயல்கள் என்ற நிபந்தனையோடு பொருள் கூறப்பட்டுள்ளது.

இத்தனை குழப்பத்திற்கு இடமளித்துள்ள இக்குறளில், வள்ளுவர் நெஞ்சம் என்னவாக இருந்திருக்கும் என்பதை நாம் கண்டறிய வேண்டும். அறிஞர்களின் உரைகள் ஒரு புறமிருக்க, வாழ்வியல் உண்மைகளின் அடிப்படையில், தீய செயல்களுக்கும் அன்பு துணை செய்யுமா என்பதை நோக்குவது பயன்தரும்.

அன்பு, அறிவு ஆகிய தகைமைகள் மிகச் சிறந்தனவேயெனினும், அவையும் அளவு சார்ந்தவையே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ' அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு ' என்பதன்றோ நம் முன்னோர் கூற்று. அக்கூற்று அன்புக்கும் பொருந்தும் என்பது ஒரு கசப்பான உண்மை.

ஒரு மனிதர் மீதோ, ஒரு பொருளின் மீதோ நாம் அளவு கடந்த அன்பு செலுத்துவோமெனில், அவரை அல்லது அப்பொருளை நாம் அடைந்தே தீர வேண்டுமென்ற ஒருவித வெறி ஏற்படுகின்றது. அவர் அல்லது அது தனக்கே தனக்கு என்னும் மனநிலை (Possessiveness) நமக்குள் அழுத்தம் பெறுகின்றது. ஒருவேளை, அவர் அல்லது அது தனக்குக் கிடைக்காதெனில், தனக்குக் கிடைக்காதது வேறு

எவருக்கும் கிடைக்கக் கூடாதென்று ஒரு வேகம் வருகின்றது. அந்த வேகமும், வெறியும் கொலை செய்யும் எல்லை வரையிலும் கூட இழுத்துச் செல்கின்றது.

இது குறித்து இன்றைய உளவியலாளர்கள் பல செய்திகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இயல்பாக வீடுகளின் நடைபெறும் மாமியார் – மருமகள் சண்டைக்குக் கூட, தனக்கே தனக்கு என்னும் மனநிலைதான் காரணம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். தன் மகன் என்று தாயும், தன் கணவன் என்று மனைவியும் எண்ணும்போது எழும் உரிமைப் போராட்டமே குடும்பச் சண்டையாய் மாறுகின்றது. இங்கே அமைதியின்மைக்கு அன்பு காரணம் ஆகவில்லையா?

எனவே, குடும்பச் சண்டை தொடங்கி, கொலைச் செயல் வரை நீண்டு செல்லும் பல தீய செயல்களுக்கும் அன்பு காரணமாக ஆக முடியும் என்பதை இன்றைய உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, '' மறத்திற்கும் அஃதே துணை '' என்கிறார் திருவள்ளுவர். ●

சுதந்திரக் கட்சியின் சந்தர்ப்பவாத அரசியல் புலிகள் தரப்பு வாதத்தை வலுப்படுத்துகிறது

தினமணி ஆசிரியத் தலையங்கம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சந்தர்ப்பவாத அரசியல், விடுதலைப் புலிகள் தரப்பிலான நியாயத்தை வலுப்படுத்துவதாக கருதுவதில் அர்த்தமில்லாமல் போகவில்லை என்று தமிழகத்தின் பிரபல நாளேடு' தினமணி ' சுட்டிக்காட்டியிருக்கிறது.

' இலங்கையின் அரசியல் குழப்பம் ' என்று மகுடமிட்டு தினமணி புதன்கிழமை ஆசிரியர் தலையங்கத்தில் தீட்டியிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஒரு வாரத்துக்குள் இலங்கையின் அரசியல் நிலை குழப்பத்துக்கு உள்ளாகியிருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகாவினால் வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக நியமிக்கப்பட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ – ஜனாதிபதியைக் கலந்து கொள்ளாமலேயே – பேரினவாதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவுடன் தேர்தல் உடன்படிக்கைச் செய்து கொண்டதற்குச் சந்திரிகா தனது அதிருப்தியைப் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். இந்த ஆண்டின் இறுதியில் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதுடன், சந்திரிகா அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சட்டப்படி போட்டியிட முடியாது என்பதால், இப்பொழுதே தன்னை ஒதுக்கிவிட்டு ஜே.வி.பி.யுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும் அளவுக்கு ராஜபக்ஷ சென்றிருப்பதாக சந்திரிகா குமுறினால் அதில் அர்த்தமிருக்கிறது.

அதைவிட, ஜே.வி.பி. விதித்த இரு முக்கிய நிபந்தனைகளின் அடிப்படையில் ராஜபக்ஷ உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருப்பது சந்திரிகாவுக்கு அதிர்ச்சியை அளித்திருக்கிறது. அந்த இரண்டில் ஒன்று – கடல் கோளால் சேதமடைந்துள்ள ஈழக் கடலோரப் பகுதி மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக விடுதலைப் புலிகளும் அங்கம் வகிக்கும் அமைப்பு ஒன்றை உருவாக்கி, சர்வதேச நிதி உதவிகளை அளிப்பதென்று சந்திரிகா செய்துள்ள முடிவை அமல்படுத்தக் கூடாது என்பது. இன்னொன்று – தற்போதைய இலங்கையின் அரசியல் அமைப்பு ஒருமுக நிர்வாகக் கட்டுகோப்பைக் கொண்டிருந்து வரும் இதே நிலையை நீடிக்க வேண்டும் ; எக் காரணத்தைக் கொண்டும் இந்த அரசியல் அமைப்பை கூட்டாட்சிக் கொள்கை அடிப்படையில் மாற்றி அமைக்கக்கூடாது என்பது.

இந்த இரண்டாவது நிபந்தனைதான் சந்திரிகாவை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியிருக்கிறது. '' சுதந்திரக் கட்சியின் ஆட்சி மன்றக் குழு என் பொறுப்பில் இருந்து வருகிறது. அக்குழுவே தேர்தல் கொள்கை அறிக்கையை வகுக்கக் கூடியது '' என்பதையும் ஜனாதிபதி நினைவூட்டத் தவறவில்லை.

அரசியல் ஆதாயத்துக்காக ஜே.வி.பி.யுடன் ராஜபக்ஷ உடன்பாடு கண்டிருப்பதற்கு ஒரு விதத்தில் வழிகாட்டியவர் சந்திரிகாவே என்பதை மறுப்பதற்கில்லை. ஈழப் பிரச்சினையில் – ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகளில் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டு வந்த சமயத்தில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி நடத்தி வந்த விக்கிரமசிங்க அரசை – தனது சிறப்பதிகாரத்தைப் பிரயோகித்து, திடீரெனப் பதவி நீக்கம் செய்ததுடன் பாராளுமன்றத்தையும் கலைத்துவிட்டுப் புதிய தேர்தலுக்குக் கடந்த ஆண்டில் உத்தரவிட்டவர் சந்திரிகாதான். அந்த நடவடிக்கை அரசியல் அடிப்படையில் எடுக்கப்பட்டதே.

அதுமட்டுமல்ல, இலங்கையில் பெரிய இனத்தின் ஆட்சியே நடக்க வேண்டும் என்பதுடன், அதற்கு உட்பட்டே தமிழர்கள் உட்பட சிறுபான்மையர் வாழ வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்ட ஜே.வி.பி.யுடன் அரசியல் ஆதாயத்துக்காக அவருடைய பிரதமர் ராஜபக்ஷ அவர் காட்டிய வழியைப் பின்பற்றினால் அதை ஆட்சேபிப்பதற்குத் தார்மீக ரீதியான உரிமை சந்திரிகாவுக்கு இருப்பதற்கில்லை. ஆயினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்தச் சந்தர்ப்பவாத அரசியல், புலிகள் தரப்பிலான நியாயத்தை வலுப்படுத்துவதாக, கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருதுவதில் அர்த்தமில்லாமல் போகவில்லை.

நன்றி : ' தினக்குரல் '

அறிவாய் நெஞ்சே

– முதற்சித்தன் –

அறிவதனை அறிவதற்கே அறிவு வேண்டும் !
அரிதான மானிடரின் பிறவி தன்னில் !
அறிவுதனைக் கொண்டுண்மைப் பொருள றிந்து
அதன் வழியில் நடப்பதுவே வாழ்க்கை யாகும் !
அறிவதனின் சாட்சியாகும் நூலைக் கற்றே
அகத்திருக்கும் அழுக்கதனை அகற்று ; நல்ல
நெறிதன்னில் வழுவாமல் வாழ்வதாலே
நெஞ்சத்தில் நிறைவுவரும் அறிவாய் நெஞ்சே !

அரிதான பிறப்பெனவே கூறும் நெஞ்சே
அறிவதனை அடைவதற்கு முயற்சி செய்வாய் !
சரிதானா செய்வதெல்லாம் என்றே எண்ணி
சரியான செயல்களையே செய்வாய் நெஞ்சே !
சிறப்பான அன்பதனைக் கொள்வ தாலே
சிறப்படைய லாமென்றே அறிவாய் நெஞ்சே !
சிறப்பான வாழ்வுக்குச் சிறப்பு செய்யும்
சான்றோர்கள் நெறியறிந்து போற்று நெஞ்சே !

தேகமதை எடுத்ததிலே சிந்தை செய்து
தேற்றுமொரு வழியறிந்து தேற்றித் தேற்றி
தேகமதை போகத்தில் போக விட்டால்
தெய்வமது காப்பதற்கும் வழியு மில்லை !
தேகமதை உழைப்பதற்கு உறுதி யாக்கு !
தேவையற்ற செயல்களையே நீக்கு நெஞ்சே !
தேகமது எடுத்தவினை செய்வ தெல்லாம்
தினப்பொழுதில் கனவாக முடியும் நெஞ்சே !

நெஞ்சே நீ இமைப்பொழுதும் அலைந்தி டாதே !
நன்னெறியா ளர்தமையும் மறந்தி டாதே !
நெஞ்சேநீ வஞ்சினமும் உன்னுள் கொள்ளாய் !
நடுநிலைநின் றாய்ந்திடுவாய் நன்றே காண்பாய் !
நெஞ்சேநீ சிற்றினஞ்சேர்ந் தல்லல் கொள்ளாய் !
நற்றவம்செய் நாணிலத்துள் வளமே காண்பாய்!
நெஞ்சே நீ போனதையே எண்ணி எண்ணி
நாட்களையும் போக்காதே ! நன்றே செய்வாய் !

வளரும்

இலங்கையில் ஜனாதிபதி தேர்தலில் யார் வெல்வது என்ற மோதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க அவரது எதிரணி வேட்பாளரான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மகிந்த ராஜபக்ஷவை விட சிறப்பான ஆரம்பத்தைக் கொண்டுள்ளார்.

ஆளும் கட்சியின் வேட்பாளர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷவிற்கு முக்கியமான சாதகத்தன்மையுள்ளது. எனினும், ஏனைய பல விடயங்களை கருத்தில் கொள்ளும்போது இருவரில் மகிந்த ராஜபக்ஷ பலவீனமானவராக உள்ளார்.

கூட்டணிகள் குறித்த பேச்சுவார்த்தைகள் இன்னமும் நடைபெற்று வருவதால் இந்த நிலை எதிர்பாராத மாற்றத்தை எந்த நேரமும் சந்திக்கலாம். தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் நிறைய நாட்கள் உள்ளன.

எனினும், இன்றைய திகதியில் விக்கிரமசிங்க தனது கொள்கைகள் குறித்து தெளிவாகவுள்ளார். மேலும், ராஜபக்ஷவை விட தனது கூட்டணியினர் யார் என்பதில் உறுதியாகவுள்ளார். ஐக்கிய தேசியக்கட்சி முழுமையாக ரணில் விக்கிரமசிங்கவின் பின்னால் உள்ள அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபட்டுள்ளது. ஒரு குழுவிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை தாங்குவதுடன் ராஜபக்ஷவின் திட்டங்களை சீர்குலைக்க முயல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெற வேண்டுமெனக் கடுமையான பிரசாரத்தை மேற்கொண்டு வந்துள்ளது. ஒரு மில்லியன் கையெழுத்துகளைத் திரட்டுவது, ஆர்ப்பாட்ட பேரணிகளை மேற்கொண்டு தனது நிலைப்பாட்டினை வலியுறுத்துவது போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இவ்விடயத்தில் எச்சரிக்கையாகவே செயற்பட்டுள்ளது. கட்சி இந்த விடயத்தில் பிளவுபட்டுள்ளது. (ஏனைய பல விடயங்களைப் போல)

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் !

(ஒரு ஆய்வு)

ராஜபக்ஷ

VS

ரணில்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் நவம்பர் 2006லேயே நடைபெற வேண்டுமென விரும்பினார். ராஜபக்ஷ இவ்வருடம் நடைபெற வேண்டுமென விரும்பினார். இறுதியில் ராஜபக்ஷ ஜனாதிபதியின் நிலைப்பாட்டிற்கு இறங்கி வந்தார். எனினும், ஜனாதிபதியின் நம்பிக்கையின்மை தொடர்கிறது.

உயர்நீதிமன்றம் 2005இல் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது. இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த வெற்றியாகும். ரணில் விக்கிரமசிங்க முதல் சுற்றில் வென்றுவிட்டதாக அறிவித்தார். 2005இல் தேர்தல் நடைபெற வேண்டும் என விரும்பிய ராஜபக்ஷவிற்கு இது மகிழ்ச்சியை கொண்டு வரவில்லை. ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இந்த தீர்ப்பு முடிவிற்கு கொண்டு வந்ததே காரணம்.

ராஜபக்ஷ, ஜனாதிபதி இந்த தீர்ப்பை தன்னுடன் தொடர்ந்து மோதுவதற்கு பயன்படுத்துவார். தான் ஜனாதிபதியாவதைத் தடுப்பதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்குவார் என அச்சம் கொண்டுள்ளார்.

சமாதான முயற்சிகளைத் தொடர்வது என்பதிலும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை பாதுகாப்பது என்பதிலும் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார். மேலும், பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதிலும் உறுதியாகவுள்ளார்.

ராஜபக்ஷ போல் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதா இல்லையா என்பதில் ரணில் விக்கிரமசிங்கவிடம் குழப்பமில்லை.

மேலும், பொதுக்கட்டமைப்பு வேண்டாம் என ஜே.வி.பி.யின் அழுத்தத்திற்கும் விக்கிரமசிங்க உள்ளாகவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டாம். பொருளாதாரத்தை மறுசீரமைக்க வேண்டாம் என்ற அழுத்தத்தையும் சந்திக்கவில்லை.

ராஜபக்ஷ, ஜே.வி.பி.யுடன் கூட்டணி வைத்துக் கொள்ள விரும்புவதன் காரணமாக இவ்வகையான அழுத்தங்களுக்கு உள்ளாவார். ஜே.வி.பி.யுடன் கூட்டணி வைத்துக் கொள்ளாமல் வெல்ல முடியாது என அவர் எதிர்பார்க்கிறார்.

சமாதான அனுசரணையாளரான நோர்வேயுடனும் சர்வதேச சமூகத்துடனும், சிறப்பான உறவுகளைப் பேணுவதற்கு விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார். மேற்குலகின் ஆதரவும் கிடைக்கும். வலதுசாரிக் கொள்கைகளை

அவர் பின்பற்றுவார். சர்வதேச முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேச நிதி அமைப்புகளுக்கு ஏற்ற கொள்கையையும் அவர் பின்பற்றுவார்.

பொருளாதார அபிவிருத்தி முதலீட்டு ஊக்குவிப்பு சகிப்புத் தன்மை போன்றவை மூலம் சமாதானம் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதே ரணில் விக்கிரமசிங்கவின் வழி. விக்கிரமசிங்க நிலைமைகளை அலசுவதில் யதார்த்த பூர்வமானவராகக் காணப்படுகிறார். தனது கொள்கைகளுக்கு அதனடிப்படையிலேயே உருக்கொடுப்பார்.

1987இற்கும் 2001இற்கும் இடையில் 40,000 பேர் யுத்தத்தினால் பலியானதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் விக்கிரமசிங்கதான் ஆரம்பித்த சமாதான முயற்சிக்கே இலங்கையின் அபிவிருத்திக்கு உதவி வழங்கும் சமூகம் 4.5 பில்லியன் டொலர் உறுதிமொழியை வழங்கக் காரணமாக அமைந்தது எனவும், எனினும் ஜனாதிபதி சமாதானத்திற்கு ஏற்படுத்திய தடைகளும், பாராளுமன்றத்தைக் கலைத்தமையும் இந்த நிதி இலங்கைக்குக் கிடைக்காத சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டது எனவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் ஐக்கிய இறைமை போன்றவற்றை விடுதலைப் புலிகளின் தாக்குதலிலிருந்து பாதுகாக்க அவர் ஏற்படுத்திய சர்வதேசப் பாதுகாப்பு வலையமைப்பு 2004 ஏப்பிரலில் ஆட்சி மாறியதைத் தொடர்ந்து பாதிப்படைய தொடங்கியது.

மேற்குலக எதிர்ப்பு தீவிர மார்க்சிஸ்ட் கட்சியான ஜே.வி.பி.யின் பிடியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம், சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப்பட்டது.

இலங்கையின் பல சிறுபான்மை சமூகங்களின் ஆதரவு விக்கிரசிங்கவிற்கு உள்ளது. மேலும், வர்த்தக சமூகத்தினரின் ஆதரவுமுள்ளது. அவர்கள் தொடர்ச்சியாக வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒழுக்கமான கட்டுப்பாடான கட்சித் தொண்டர்களைக் கொண்டுள்ளது. கட்சித் தலைவரே அனைத்தையும் தீர்மானிக்கின்றார். அரசாங்கத்தில் இல்லாத போதிலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அந்த கட்சிக்கே உள்ளது.

எனினும், விக்கிரமசிங்கவிடம் சில பலவீனங்களும் உள்ளன. அவர் ஒரு நகர உயர்வர்க்கத்தவர். சாதாரண மக்களுடன் தொடர்பு கொள்வதற்கு பொருத்தமற்றவர். விக்கிரமசிங்க உள்முகத்தன்மை கொண்டவர்.

கருத்துகளை வெளிப்படுத்தும் விருப்பமற்றவர், இலங்கையின் ஏனைய அரசியல்வாதிகளைப் போல உடையணியாதவர்.

அவரது பேச்சுக்கள், உரைகள் அர்த்தமுள்ளவை, ஆழமானவை, ஆனால், உணர்ச்சி வசப்பட செய்பவையல்ல.

இன்னொரு பலவீனம் ஐக்கிய தேசியக் கட்சி சிறிதளவு கிராம சிங்கள பௌத்த ஆன்மாவிலிருந்து அந்நியப்பட்டுள்ளமை. ஐக்கிய தேசியக் கட்சி கிராமப்புற சிங்கள – பௌத்தர்களின் நலன்களையும் முன்னிலைப்படுத்தினாலும் சுதந்திரக் கட்சியே காலாதி காலமாக் கிராமப்புறத்தவர்களது கட்சியாகக் கருதப்பட்டு வந்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி சிறுபான்மையினர் அடைக்கலம் புகும் கட்சியாகப் பார்க்கப்படுவதே இதற்கு காரணம். மத – எதிர்ப்பு சட்ட மூலம் சிங்கள கிறிஸ்தவர்கள் ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவிற்குப் பெற்றுத் தரும்.

ராஜபக்ஷவிற்கு கிராமப்புற சிங்கள – பௌத்தர் என்ற அங்கீகாரம் சாதகமான விடயமாகவுள்ளது. இவர் பெலியட்ட எனும் சிறிய நகரத்தைச் சேர்ந்தவர். விக்கிரமசிங்க போல் உயர் குழாமைச் சேர்ந்தவரல்ல, எப்போதும் தேசிய உடையில் காணப்படுவார், அணுகுவது சுலபம்.

சிங்கள – பௌத்தர் என அவர் கருதப்பட்டாலும், அவருடைய மனைவி ஒரு கத்தோலிக்க பேர்கர்.

ராஜபக்ஷவிற்கு விடுதலைப் புலிகளைக் கடுமையாக எதிர்ப்பவர்களினதும் பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் கிழக்கு மாகாண முஸ்லிம்களினதும் ஆதரவு கிடைக்கக் கூடும்.

ராஜபக்ஷ சாதாரண மனிதனின் மனிதன், தொழிற்சங்கவாதி. ஒடுக்கப்பட்ட மற்றும் வறியவர்களுக்காக குரல் கொடுப்பவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் அவருக்கு பெரும்பான்மை ஆதரவானது, அவ்வாறான ஆதரவு இல்லாத பட்சத்தில் 2004 இல் ஜனாதிபதியுடன் போராடி பிரதமராகியிருக்க முடியாது. அவர் ஜனாதிபதி வேட்பாளர் ஆனதும் அவ்வாறே ஜனாதிபதி தொடர்ச்சியாக தனது இளைய சகோதரரை முன்னிலைப்படுத்தி வந்தார். எனினும், ராஜபக்ஷவிற்கு தனிப்பட்ட பலவீனங்கள் உள்ளன. அவர் ஒரு திறமையான நிர்வாகியல்ல.

அரசியல் ஆய்வாளர்கள் அவரால் கட்சியையோ அரசாங்கத்தையோ எந்த ஒரு விடயத்திலும் முன்னோக்கி நகர்த்த முடியாது என கருதுகின்றனர். தன்னை ஒரு இடதுசாரி என்று சொல்லிக்கொண்டாலும் அவரிடம் ஒரு நிகழ்ச்சி நிரல் இல்லை. மேலும், அழுத்தங்களை எதிர்கொள்ள முடியாதவர்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒப்பிடும்போது, ராஜபக்ஷ மிகக் குறைந்தளவு சாதனைகளுடனேயே போட்டியில் இறங்கியுள்ளார் என ஆங்கிலப் பத்திரிகையொன்று தனது ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவிக்கின்றது. அவரது தொழில்சார் பட்டயம் கூட அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டது.

ராஜபக்ஷவிற்கென தெளிவான ஒரு தளம் இல்லை. அவருடைய நிலைப்பாடுகள் என்னவென்பது வாக்காளர்களுக்குத் தெரியாது.

ஜனாதிபதி வேட்பாளர் என்ற வகையில் அவரது சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி குறித்த தெளிவற்ற பிரகடனங்களாக உள்ளதாக குறிப்பிட்ட பத்திரிகை தெரிவிக்கிறது.

புத்திஜீவி வெற்றிடத்தில் செயற்படுபவர் போல தோற்றமளிப்பது ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு நன்மையளிக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய பிரச்சினைகளில் தனது நிலைப்பாடு என்னவென்பது குறித்து ராஜபக்ஷ இன்னமும் வெளிப்படுத்தவில்லை. சமாதானத்தை எவ்வாறு உருவாக்குவது? வெளிநாட்டு அனுசரணையாளர்களின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் உட்பட முக்கிய விடயங்கள் குறித்து அவர் தெளிவுபடுத்தவில்லை. பொருளாதார மறு சீரமைப்பு, வெளிநாட்டு முதலீடு, தனியார்ப் பல்கலைக்கழகம் போன்ற விடயங்கள் குறித்தும் அவர் கருத்து வெளியிடவில்லை.

ஜே.வி.வி.யுடன் கூட்டணி வைத்துக்கொண்டால் அவர் தீவிர மார்க்கிஸ், சிங்களப் பெரும்பான்மைத் தளத்தில் நிற்பார் எனத் தெரிவிக்கலாம்.

மாறாக ஜே.வி.பி இல்லாமல் அவரால் எதனையும் வழங்க முடியாது.

மகிந்த சிங்கள தேசியவாதி எனவும் அவரது கரங்களிலேயே நாடு பலமாக இருக்கும் எனவும் வர்ணிக்கப்படுகின்றன. அவரது சிங்கள தேசியவாதம் எதுவென்பது உறுதியாகத் தெரியவில்லை. குறிப்பாக, இன்றைய முக்கியப் பிரச்சினைகள் சிங்கள தேசியவாதம் என்பது எது என்பது தெளிவில்லை.

இவை யாவற்றையும் விட முக்கியமான விடயம் அவர் ஜே.வி.பி.யுடன் கூட்டணி ஏற்படுத்தக் கடும் முயற்சி மேற்கொள்கின்றார். எனினும், ஜே.வி.பி.யால் அனுபவப்பட்ட ஜனாதிபதி அதனைக் கடுமையாக எதிர்க்கிறார்.

ஜே.வி.பி.யுடனும் அவருக்குப் பிரச்சினைகள் உள்ளன. அது இதுவரை கடுமையான சிங்கள தேசியவாதியாக, விடுதலைப்புலி, நோர்வே எதிர்ப்பாளராக மாற வேண்டும் என விரும்புகின்றது. எனினும், அவர் இவ்வாறு செய்துவிட்டு இலங்கை ஜனாதிபதியாகச் செயற்பட முடியாது.

ஜே.வி.பி. தனது ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளைக் கைவிட்டு தனக்கு ஆதரவளிக்கும் என எதிர்ப்பார்க்கின்றனர்.

ஜே.வி.பி. அவருக்கு ஆதரவு இறுதியில் வழங்கினால் சிங்கள பௌத்தர்களின் வாக்கு கிடைப்பது உறுதியாகும். ராஜபக்ஷ, ரணிலிற்கு கடும் சவாலை அளிப்பார்.

எனினும், ஜனாதிபதி இறுதிவரை மகிந்தவிற்கு நெருக்கடியாகவே இருப்பார். அவர் ஜே.வி.பி. – மகிந்த கூட்டணிக்கு எதிராகவும் செயற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நன்றி : இந்துஸ்தான் ரைம்ஸ்

ஆசிரியர் : நான் சொல்வதைக் கவனிங்க ஒரு காளையும், ஒரு பசுவும் வயலில் மேய்ந்து கொண்டிருந்தது. இதிலுள்ள பிழையை திருத்துக.

மாணவன் : ஒரு பசுவும், ஒரு காளையும் வயலில் மேய்ந்து கொண்டிருந்தது. இதுதான் டீச்சர் கரெக்ட்

ஆசிரியர் : எப்படி கரெக்ட்

மாணவன் : எப்போதும் Ladies First என்று நீங்கள் சொல்லுவீர்களல்லவா? பசுதான் First

நிருபர் – நீங்க இவ்வளவு பெரிய லட்சாதிபதியா இருக்கிறதுக்குக் காரணம் யாருன்னு சொல்லமுடியுமா?

மனிதர் – ஓ. என் மனைவிதான்

நிருபர் – உங்க மனைவியை ரொம்ப பாராட்டணும். அப்ப திருமணத்திற்கு முன்னாடி எப்படி இருந்தீங்க.

மனிதர் – பெரிய கோடீஸ்வரனா இருந்தேன்

ஒரு பரீட்சை ஹாலில் ஆசிரியர் Question Paper (கேள்வித்தாள் கொடுத்தார்). மாணவர்கள் அமைதியாக வாங்கிக் கொண்டார்கள். பிறகு பதில் எழுதுவதற்கு Answer Paper (விடைத்தாள்) கொடுத்தபோது ஆசிரியரைப் பார்த்த மாணவன் கேட்டான் "இது என்ன சார்." ஆசிரியர் சொன்னார். "Answer Paper" : உடனே மாணவன் இவ்ளோ பெரிய மனிதர்கள் எல்லாம் பொய் சொல்லலாமா Question Paper என்றீர்கள் அதில் Question இருக்கிறது. Answer Paper என்றீர்கள் அதில Answer இருக்கிறதா? எப்படி சாமார்த்தியம் பாருங்கள்.

காதலிப்போர் கவனத்திற்கு!

தனது காதலனது அசட்டுச் செயல்களால் மிகவும் எரிச்சல் அடைந்திருந்த பெண்ணிடம் அவள் காதலன் கண்ணே என் வாழ்வின் சூரிய ஒளியாக இருக்க நீ விரும்புகிறாயா என்று கேட்டான்.

" நிச்சயமான ! உங்களிடமிருந்து நூற்று ஐம்பது மில்லியன் கிலோமீட்டர்கள் தொலைவில் இருப்பதைவிட எனக்கு அதிக மகிழ்ச்சி தரும் விஷயம் என்ன இருக்க முடியும் " என்று வெடித்தாள் காதலி.

காதலர்களே – உவமைகளை ஜாக்கிரதையாகக் கையாளுதல் நல்லது.

பித்தலாட்டக்காரன்

தமிழில் ஏமாற்று வேலை செய்பவரைக் குறிக்க பித்தலாட்டக்காரன் என்று சொல்லுவது வழக்கம். இந்தச் சொல் எப்படி உருவானது தெரியுமா? பித்தளை என்பது பாத்திரங்கள் செய்யப் பயன்படும் விலைக் குறைந்த உலோகம். தங்கமோ அணிகள் செய்யப் பயன்படும் விலைகூடிய உலோகம். சித்தாகள் பித்தளையைக் களிம்பு நீக்கித் தங்கமாக்கிவிடுவார்கள். தங்கத்துக்குத் தமிழில் ஆடகம் என்று பெயர். பித்தளையை ஆடகமாக்கும் சித்தர்களின் ரசவாதம் ஒரு வகையில் ஏமாற்று வேலைதான். இதனையே பித்தளை ஆடகக்காரன் - பித்தளை ஆடகக்காரன் என்று சொல்லி நாளடைவில் அது பித்தலாட்டக்காரன் என்பதாக ஆகிவிட்டது.

சொன்னவர் : தத்துவப் பேராசிரியர் டாக்டர் டி.என். கணபதி

பேராசிரியர் எமெனோ மறைவு

திராவிட மொழியியல் ஆராய்ச்சியில் முதன்முதலில் ஈடுபட்டுத் திராவிட மொழிக் குடும்பம் பற்றி உலகுக்கு உணர்த்திய முனைவர் கால்டுவெல் அவர்களுக்குப் பிறகு, திராவிட மொழியியல் ஆராய்ச்சியை மேலும் செழுமைப்படுத்திய பெருமை கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியர் மூர்ரே எமெனோ அவர்களைச் சாரும். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் தா. பர்ரோ அவர்களுடன் இணைந்து திராவிடச் சொற்பிறப்பு அகராதியை உருவாக்கியவர்.

திராவிட மொழிகளிலிருந்து சமற்கிருதம் கடன்பெற்ற சொற்கள் என்ற தலைப்பில் சிறப்பாக ஆய்வு செய்து வெளியிட்டார். சமற்கிருத முதல் வேதமாகிய ரிக் வேதத்தில் இருபது சொற்களுக்கு மேல திராவிட மொழிகளிலிருந்து கடன்பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

1961ஆம் ஆண்டில் இவரும் பர்ரோ அவர்களும் உருவாக்கிய திராவிட மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியை அடித்தளமாகக் கொண்டு உலகெங்கும் ஏராளமான ஆய்வுக்கட்டுரைகளும் நூல்களும் வெளி வந்திருக்கின்றன.

வடமொழி தேவமொழி என்றும் அது பிறமொழிகளிலிருந்து கடன்பெறாது என்றும் நிலவிய மூடநம்பிக்கையத் தகர்த்து ரிக் வேத காலத்திலேயே வடமொழி தமிழிலிருந்து கடன் வாங்கியிருக்கிறது என்ற உண்மையை வெளிப்படுத்திய பெருமை பர்ரோ, எமெனோ ஆகியவர்களுக்கு உண்டு.

உலக மொழிகளிலேயே மிக அதிகமான வேர்ச்சொற்களைக் கொண்ட மொழி தமிழ் மட்டுமே என்றும் இக்காலத் தேவைகளுக்கு மட்டுமல்ல, எதிர்காலத் தேவைகளுக்கும் தேவையான சொற்களைப் புதுப்புது வடிவங்களில் உருவாக்கிப் பயன்பெற முடியும் என்றும் அவர் விடுத்த கருத்தாக்கத்தைப் பின்பற்றி இன்று பல அறிஞர்கள் தமிழ்க் கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவில் பிறந்து திராவிட மொழியியல் ஆராய்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு உலகம் புகழும் வகையில் தொண்டாற்றிய பெருமை எமெனோ அவர்களுக்கு உண்டு. எத்தகைய பயனையும் எதிர்பாராமல் தான் கண்டறிந்த உண்மைகளை உலகுக்கு உணர்த்தியதன் மூலம் தமிழுக்கும் திராவிட மொழிகளுக்கும் இதுவரை யாரும் தேடித்தராத பெருமையைத் தேடித்தந்திருக்கிறார். தமிழாகள் என்றென்றும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்கள். தனது 102ஆவது வயதில் காலமான அவருக்கு தமிழ்கூறும் நல்லுலகத்தின் சார்பில் நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறோம்.

நன்றி : தென் ஆசியச் செய்தி

தி. சபாநாதன்

மழை வரும்போலிருந்தது. மார்கழியின் பிற்பகுதியில் பெய்ததற்குப்பின், இன்று எப்படியும் இறங்கிவிடுவதென்று அதனது அவஸ்தையை, தென்மேற்கு வானம் குறிகாட்டியது. காற்றுக் குளிர்ந்து சிலுசிலுத்தது.

' சே... குடை கொண்டு வராதது எவ்வளவு மடத்தனம்... 'என்னையே நான் நொந்துகொள்ளும் அவலம்.

அரைமணி நேரம் பஸ் தரிப்பில் தவமியற்றியும் பஸ் வந்து சேரவில்லை.

' இன்னும் ஏன் பஸ் வரேல்லை. இண்டைக்கு பஸ்ஸே வராதோ ... ? ' நினைப்பே அலுப்பைத் தருகிறது.

' சடசட ' எனக் கோடை மழையின் பெருந்துளிகள் ஆலமரத்தின் இலைகளில் விழுகின்றன. இலைகளில் படிந்திருந்த ' தூசி ' கரைந்து வடிகிறது. அழுக்கு நீர் ஆடையில் தெறித்துவிடுமோ என்ற பயம் என்னை அருகே இருந்த தேநீர்க் கடைக்குள் விரட்டுகிறது. கடையினோரமாய் ஒதுங்கிக் கொள்கிறேன்.

கடும் வறட்சிக்குப்பின் மழை ஒருவாறு வந்துவிட்டது. புழுதியில் நீர் பட்டதும் மண்ணின் மணம் நாசித் துவாரங்களை முற்றுகையிட்டு, நெஞ்சை நிறைக்கிறது.

தூரத்தில், ஒரு வெள்ளாடு இடைவிடாமல் அழுது கொண்டேயிருந்தது.

ஆலடிச் சந்தியிலிருந்து தெற்கே பிரியும் ஒழுங்கையில் இரண்டு குழந்தைகள் ! பிறந்தமேனியாய் மழையில் நனைந்தபடி, ஓடி ஓடி மழைத் தாரையைப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

' என்ன விளையாட்டோ ... ? அலுப்பில்லாத விளையாட்டு ...! '

' மழை பெலக்கமுந்தி பஸ் வந்திட்டா நல்லம். '

குரல் வந்த திசையைப் பார்த்தேன். ஈசன் சந்தனப் பொட்டோடு நின்று கொண்டிருந்தார். அவரது ' பறங்கி ' உடையும், சந்தனப் பொட்டும் அவருக்கே உரித்தான சின்னங்கள். அவரது வழுக்கைத் தலையிலிருந்து நீர்வழிந்து கொண்டிருந்தது. முகத்திலும் நீர்த்துளிகள்.

'' மாஸ்ரர் ..... துலைக்கே பயணம்.... ? ''

'' யாழ்ப்பாணம்... ''

'' நானும் யாழ்ப்பாணம் வரைதான் ... '' கேள்வி இல்லாமலே அவரது பதில்.

'' இப்ப இஞ்சை என்ன நடக்குது. ... தாவாடியிலை இல்லையே ... ? ''

'' அவதான் அங்கை.... நான் இஞ்சை கண்ணகை அம்மன்னரை தேரோடை வந்தாப்பிலை, பெரியாச்சியோடை நிக்கிறன். அதுசரி மாஸ்ரர்.... ! உங்களுக்கு நவத்தாரைத் தெரியுமே ... ? அவர்தான் ... ! அவரைத் தெரியாதே...? பெரிய வளவு முகத்தாற்றை மருமகன், அவர் இப்ப ஜே.பி, எல்லே..... ! நான்தான் நீதி மந்திரியைப் பிடிச்சு ஒருமாதிரிச் சொல்லிக்கில்லி அவரை ஜே.பி. ஆக்கினனான். ''

ஈசன் தொடங்கிவிட்டார். அவருடன் பேசுவது ஓர் இதமான பொழுதுபோக்கு.

'' ஏன் ஈசன்....? நீங்கள் அந்த மந்திரியைப் பிடிச்சு உங்களுக்கு ஒரு உத்தியோகம் எடுத்தாலென்ன...? ''

'' அவரைப் பிடிக்கலாம்தான்..... ஆனால் அவர் ' டிகிறி ' இருந்தால்தான் ஏதாவது ' கோப்பரேசனிலை ' செயர்மனாப் போடலாம் எண்டவர். அதுதான் இப்ப ' டிகிறி ' எக்ஸ்ரேனலா எடுத்தனான். மறுமொழி வந்திட்டு. பாஸ்தான், கிட்டடியிலை ஒருக்கா இதுவிஷயமாய் அவரைப் போய்ப் பார்க்கவேணும். அதுக்கிடையிலை, இஞ்சை சித்தாந்தப் புலவர் பரீட்சைக்குப் பேப்பர் ' செற் ' பண்ணச் சொல்லீற்றாங்கள். நானெல்லே இப்ப தீவுப்பகுதி இந்து வாலிபர்சங்க தலைவர் அதோடை இரண்டாம் தீட்சைவேறை கேட்டிட்டன். ஒரு வேளைதான் சாப்பாடு. மற்ற நேரம் பாலும் பழமும். ஒரு சைவப் பழமெண்டு பேப்பர் செற் பண்ணச் சொல்லேக்கை தட்டேலுமே...? எல்லாம் பெரிய தொந்தரவா இருக்கு மாஸ்ரர்... மூச்சுவிட நேரமில்லை. ''

ஈசனைத் தட்டிவிட்டால் போதும். நேரம்போவது தெரியாமல் ஏதாவது ' அளந்து ' கொண்டிருப்பார். அலுப்பே தெரியாத ஓர் அரிய அனுபவமது. அந்த அனுபவத்தையே கெடுப்பதுபோல அந்த பஸ் – இடையிடையே ஒருவகைக் குலுக்கலுடன் – அசைந்து வந்து எங்களது காலடியில் சரிவது போல் நின்றது.

நானும் ஈசனும் ஏறிக்கொண்டோம். பஸ் புறப்பட்டது. ஈசனைப் பார்த்தேன். அவர் அவசர அவசரமாக என்னைப் பிடித்துத் தள்ளியபடி, பஸ்ஸினுள் விரைந்தார். ஏன் அவருக்கு இவ்வளவு அவசரம்.

அவரது அவசரம் எனக்குப் புரிந்தது.

பஸ்ஸின் இடது பக்கத்தில், கடைசி ' சீற்றுக்கு ' முன் உள்ள ' சீற் 'தான் அவரை இழுத்திருக்க வேண்டும்.

அங்கு குளிர்ச்சியாக, மாங்குருத்துப்போல ஒரு பெண்! கண்ணுக்குச் சொகுசாக இருந்தாள்.

திடீரெனத் திரும்பியபோது அவளது கண்களில் தெறித்த வசீகரம் என்னையே ஒருகணம் நடுக்கமுறச் செய்தது. இவ்விஷயத்தில் மிகவும் பலவீனமான ஈசன் அவள்பால் இழுபட்டதில் வியப்பில்லை. அவளுக்குப் பக்கத்தில் அவர் நெருக்கமாக உட்கார்ந்துக் கொண்டார்.

நான் கொண்டக்டரிடம் ஓர் ஐந்து ரூபாயைக் கொடுத்து, யாழ்ப்பாணத்திற்கு இரண்டு ' ரிக்கற் ' வாங்கிக் கொண்டேன்.

கொண்டக்டர் சரியான ' இளவட்டம் '. மீசை அடர்த்தி கொள்ளாமல் பூனைமயிர்போல் பிசிறியிருந்தது. மெலிந்து உயரமாய் வளர்ந்திருந்தான். ஏதோ தீவிரமாகக் கணக்குப் பார்த்தான். இருந்தும் ' ரிக்கற் ' தந்தான். மீதம் தரவில்லை. இரண்டு ரூபாயும் சில்லறையும். பின்பு வாங்கிக்கொள்ளலாமென நினைத்தபடி, அவனைக் கடந்து – ஈசனிருந்த இடத்திற்குச் சிறிது முன்பாக உட்கார்ந்து கொண்டேன்.

பஸ் அசைந்து அசைந்து அதனது இயல்பான குலுக்கலுடன் போய்க்கொண்டிருந்தது.

பஸ்ஸில், அதிக பயணிகள் இல்லை.

ஈசனைப் பார்த்தேன். அவர் அந்தப் பெண்ணுடன் நெருக்கமாக இருந்து, தனது அரைகுறை ஆங்கில ஞானத்தைக் கூர்மைப்படுத்திக்கொண்டிருந்தார்.

' யார் இந்தப் பெண்...! சிங்களமா...?தமிழா...? நயினா தீவுக்குப் போய்த் திரும்புகிறாளே....! தனியாகவா? ஏன் தனியாகப் போய்வரக்கூடாதா ! '

ஈசன் ஏதோ சொல்ல, அவள் சற்று அவர்பார் சரிந்து குலுங்கிச் சிரித்தாள். அது சிரிப்பா என்ன! ஜலதரங்கத்தின் இசைமுறுக்கேறிய அதிர்வுகள்.

அவர்களை அந்த நிலையில் பார்த்ததும் எனக்கு லேசான பொறாமையின் உறுத்தல். ஆணுக்கே உரித்தான அந்த அற்பத்தனமான ' சபலம் '. கூச்சத்துடன் என்னைச் சுதாரித்துக் கொண்டேன். பயணிகள் பக்கம் என் பார்வை படர்ந்தது. அவர்களும் இப்பொழுது தங்கள் முறைக்கு அந்த இருவரையும் மூர்க்கமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களது பார்வையில் இழையும் அந்த உணர்வு – பொறாமையா, ஏமாற்றமா, வெறுப்பா அல்லது எல்லாவற்றினதும் கலவையா?

இந்த உணர்வுச் சுழிப்பெதிலும் சிக்காமல், ஈசனும் அவளும் – தம்சுயத்தையே இழந்தவர்களாய், சுற்றுச் சார்பின் பாதிப்புகளையே லேசாக ஒதுக்கித் தள்ளிவிட்டு – கனிந்து போய் இருந்தார்கள்.

அது ஓர் அற்புத சாதகம்தான் !

ஈசன் ஏதோ ' கிசுகிசு 'ப்பதும், அதற்கு அவளது பெண்மைச் சிணுங்கலும், லேசாக எனது காதில் விழுந்தன !

" ஓ....! யூ ஆர் இன் த ரையர் கோர்பரேசன்... ம்... செயர்மன் ! "

" யேஸ்... யேஸ்... "

" ஸ்ரில் ஏ பாச்சிலர்...? "

" ய்யா.... "

அவள் நெளிந்து, கிளுகிளுத்து அவரது காதில் உதடுகள் உரச ஏதோ சொன்னாள். அதற்கு ஈசன் செம்மைப் பூரிப்புடன் :

" ஒவ்கோர்ஸ்.... வைநாட்.... ஐ வில் ஃபார் யூ.... "

அவரது கரங்கள் அவளது இடையைத் தழுவத் துடிப்பதைக் கண்ணுற்ற நான் – ' எப்ப இருந்து இவர் ரையர் கோப்பரேசனிலை செயர்மன் ஆனார் ! ' என்ற வியப்புடன் – அவர்கள்பால் இருந்த எனது பார்வையைப் பலவந்தமாகப் ' பிடுங்கி ' பஸ்ஸின் கண்ணாடி ஊடாக வெளியே பார்த்தேன்.

பஸ் பாலத்தைக் கடந்து, வேலணைத் துறையில் போய்க் கொண்டிருந்தது.

வானமே 'பொத்துக் ' கொண்டதுபோல மழை பொழிந்து கொண்டிருந்தது.

மழை நீரைக் குடித்த பூமி, புளகமுற்றுப் பூரித்துக் கிடந்தது.

' கொண்டக்டர் கணக்குப் பார்த்து முடிச்சாச்சு போலை... ' அவன் எனக்குப் பின்னாலிருப்பதைக் கண்டு அவனைப் பார்த்துக் கேட்டேன் :

' தம்பி.....! மிச்சக்காசு '

" மிச்சம் ? " கொண்டக்டரின் உதட்டில் நெளிந்த ஏளனம் என்னைச் சிறுமைப்படுத்தியது.

அவன் எழுந்து பஸ்ஸின் முன்பக்கம் விரைந்தான்.

இது எனக்குப் புது அனுபவம். எல்லாரும் இப்பொழுது என்னையே பார்த்தார்கள். அதை என்னால் தாளமுடியவில்லை. அனல்மீதிருப்பதுபோல ஒரு பதைப்பு.

திடீரென எழுந்த நான், மீண்டும் அவனைப் பார்த்துக் கேட்டேன் :

'' என்ரை மிச்சக்காசு ''

'' என்ன? என்னகாணும்... சும்மா இரும். மிச்சம் தந்தாச்சு... ஒருக்கா வடிவாய்க் கணக்கைப் பாரும்...! ''

அவன் கத்தினான். தொடர்ந்து அவன் பஸ்ஸில் இருப்பவர்களையெல்லாம் தன் கட்சிக்கு அழைத்து:

'' இந்த ஆளைப் பாருங்க... படிச்சதாட்டமிருக்குது.... கொடுத்த காசை இல்லையெண்டு என்னைப் பேய்க்காட்டிறதை ''

'' நீங்க... எதுக்கும் உங்கடை பொக்கற்றை ஒருக்காப் பாருங்க. ஏன் வீண் சண்டை... ஒருக்காப் பாருங்க... ''

அங்கிருந்த அனைவரும் என்னைக் குற்றக்கூண்டில் ஏற்றிவிட்டு, அவன்பால் – அந்தக் கொண்டக்டர்பால் பரிவு கொண்டது எனக்கு மிகுந்த எரிச்சலூட்டியது.

'' நானும் அவனைப்போலை.... அங்கிருந்த எல்லாரையும் திட்டிவிடலாம்... ஆனால், இந்தப் பாழும் மனசு சமயத்திலை என்னை மௌனியாக்கி விடுகிறதே. மனசு மட்டும்தானா, இந்த ஆசிரியத்தனமும்தான். ''

உடலும் உள்ளமும் குறுகிய – எல்லாருடைய பார்வையின் லட்சியமாகிவிட்ட – அந்த நிலையிலும், என்னால் லேசாக சிரிக்க முடிந்தது.

' சுந்தர ராமசாமியின்ரை பிரசாதம் கதையிலைவாற அந்தப் பொலீஸ்காரருக்குத் தேவைபட்டதுபோலை... இவனுக்கும்... இந்தக் கொண்டக்டருக்கும்.... அப்பிடி ஒரு தேவையே? குழந்தையின்ரை பிறந்ததினத்துக்கு அர்ச்சனை செய்ய மனைவி ஐஞ்சு ரூபாய் கேட்டிருப்பாளே...? இல்லை, சதா படுக்கையே கதியெண்டு கிடக்கும் தாய்க்கு மருந்து வாங்க... பட்ட கடனை அடைக்க... மனைவிக்குத் தெரியாமல் கள்ளமாக உறவு வைச்சிருக்கிற பெண்ணுக்கு ஐஞ்சோ பத்தோ கொடுங்க.... இதிலை எது? என்ன இருந்தாலும் இவன் இப்படி நடந்திருக்கக்கூடாது... '

அந்த நினைப்புத் தந்த அவசரத்தில் நான்அவனிடம் சொன்னேன்.

'' தம்பி! நீ இப்பிடி நடக்கலாமே... என்ரை உணர்ச்சியளையே கிளறி வேடிக்கை பார்க்கிறை... நான் ஒரு ஆசிரியன். ஏன் பொய் சொல்ல வேணும். நீ மறந்திருப்பை நினைச்சுப் பார். ''

'' இல்லை மாஸ்ரர். நான் தந்திட்டன். ''

'' சரி பரவாயில்லை, இது எனக்பொரு பாடம். பட்டுத்தானே படிக்கவேண்டியிருக்கு...! ''

'' நீங்க பேசிறதைப் பார்த்தா நான்தான் ஏதோ எடுத்த மாதிரி...! அப்ப தரட்டுமே.... மிச்சத்தைத் தரட்டுமே...? ''

'' உனக்குப் படுமாப்போலை செய்யன் ''

அவன் தயங்கியபடி, இரண்டு ரூபாய் நோட்டொன்றை விரல்களின் இடுக்கிலிருந்து உருவி எடுத்தான்.

அப்பொழுது பஸ் வங்களாவடியில் தரித்தது.

ஒரு சிறு ' பையுடன் ' ஓர் இளைஞன் ஏறினான். கருங்காலிக்கட்டையின் பொலிவு. கொண்டக்டர் திடீரென கையில் வைத்திருந்த இரண்டு ரூபாய்த் தாளை மீண்டும் விரல்களிடையே திணித்தபடி, அந்த இளைஞனை அணுகினான்:

'' யாழ்ப்பாணம் ? ''

அவனது பையைத் தூக்கிப் பார்த்துவிட்டு அதற்கும் சேர்த்துக் கொண்டக்டர் ' ரிக்கற் ' எழுதினான்.

' ரிக்கற் 'ரை வாங்கிய அந்த இளைஞன் சற்றுச் சினத்தவனாய்:

'' என்ன ? என்னப்பா இது...? ஒரு பத்துறாத்தல் செத்தலுக்கும் ஐஞ்சாறு பிஞ்சுக் கத்தரிக்காய்க்கும் ஐம்பது சதம் போடிறை.... ஏதோ ஐஞ்சுபணம் கிடைக்குமெண்டுதானே இஞ்சையிருந்து பட்டணத்துக்கு நானிதைக் காவிறன்..... உனக்கு இரக்கமிருக்கே...? என்னைப்போல நீயுமொரு பிச்சைப்பெட்டிதானே...! அங்கை ஒண்டும் கொடிகட்டிப் பறக்கேல்லையே... ஏதோ உன்ரை புண்ணியம்... அரசாங்கம் மாதா மாதம் பிச்சை போடுது... அதுக்கு என்ரை வயித்திலையே அடிக்கிறது. ''

அவன் கொண்டக்டரை இடித்துத் தள்ளியபடி, பஸ்ஸினுள் வந்து எனக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டான்.

அவன், ' என்னைப்போல நீயும் ஒரு பிச்சைப் பெட்டிதானே ', என்று கூறிய கூற்று என்மனதில் திரும்பத் திரும்ப மிதப்புக் கொண்டது.

'' இஞ்சை பாரும் தம்பி..... நீ சொலுமாப்போலை எல்லரேமே பிச்சைப் பெட்டிகள்தா ; ஒருசிலரைத்தவிர. அந்தப் பிச்சைப்பெட்டிகளுக்கிடையிலையும் எவ்வளவு பிக்கல் பிடுங்கல்கள். நாங்களிதை உணர்ந்து

நேசப்பட்டால் போதும். அதுதான் உண்மையான நேசம். அந்த நேசம் உலகத்தையே எங்கடை காலடியில் கிடத்தும். ''

'' என்ன...! மாஸ்ரர் பாடம் நடத்திறார். வகுப்பறை எண்டு நினைச்சிற்றார்போலை! ''

பஸ்ஸில் இருந்த இளசுகள் சிலதின் வெடிச் சிரிப்பு.

'' இல்லை... மாஸ்ரர் மார்க்கிஸம் பேசிறார். '' விஷயந்தெரிந்த ஒருவரின் விளக்கம்.

'' என்ரை இயல்புகளுக்கு மாறாகச் சற்று உரக்கத்தான் பேசிப்போட்டேனோ ? ''

மனதில் திரளும் எண்ணங்களோடு அந்த இளைஞனைப் பார்த்தேன். அவன் முகத்தில் தெறித்த கொதிப்பு கொண்டக்டரை நடுங்க வைத்தது. அவன் ரிக்கற்றுக்குரிய பணத்தை வேண்டா வெறுப்பாகக் கொடுத்தான். கொடுத்த கையோடு மனம் கூசும் வகையில், கொண்டக்டரைத் திட்டவும் செய்தான்.

கொண்டக்டர் என்னைப் பார்த்தான். பின் சுற்றுமுற்றும் பார்த்துக் குறுகிப்போய் நின்றான்.

அவனை இப்பொழுது எல்லாரும் எரித்துவிடுவதுபோலப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த இறுக்கத்திலிருந்து – எனது பார்வையை விலக்கி, ஈசனையும் அந்த அழகியையும் பார்த்தேன்.

அவர்கள் இப்பொழுது தனிமைநாடி கடைசிச் சீற்றில் இருந்தார்கள. அந்த அழகி, ஈசனின் தோளில் ஒய்யாரமாக சாய்ந்து துயின்றுகொண்டிருந்தாள்.

துயிலும்போதும் அவள் அழகிதான் !

பஸ் மண்கும்பான் பிள்ளையார் கோவிலடியை அடைந்த பொழுது, நாலைந்துபேர் ஏறிக்கொண்டார்கள்.

அவர்கள் – ரிக்கற் பரிசோதகர்கள் !

அவர்களில் ஒருவர் பயணிகளை எண்ணிச் சரிபார்த்தார். மற்ற இருவர் பயணிகளின் ' ரிக்கற்றை ' வாங்கிச் சரிபார்த்தபடி வந்தார்கள்.

எனக்கு இரண்டு சீற் தள்ளி, முதியவர் ஒருவர் அயர்ந்து பொய்த் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தார். அவரை அணுகிய பரிசோதகரொருவர் அவரது முதுகில் தட்டி, '' பெரியவர் ...! ரிக்கற் '', என்றார்.

'' என்ன... என்ன தம்பி ரிக்கற்றே? யாழ்ப்பாணத்துக்கு ஒரு துண்டு குடணை அப்பு. ''

அவர் ஐந்து ரூபாய் நோட்டொன்றை பதட்டமேதுமின்றி நீட்டினார்.

'' எங்கையிருந்து வாறை? ''

'' குறிகட்டுவான் ''

'' குறிகட்டுவானிலை பஸ்சேறி... மண்கும்பானுக்கையே ' ரிக்கற் ' கேக்கிறை... நல்லாயிருக்குது உன்ரை வேலை. ' ரிக்கற் ' இல்லாமைப் பிரயாணம் செய்யக்கூடாதெண்டு தெரியாதே? ''

பரிசோதகர்கள் அனைவரும் உசாரானார்கள். அவர்கள் அப்புவைச் சூழ்ந்து கொண்டார்கள். கொண்டக்டருக்கு என்ன செய்வதென்றே தெரியாத நிலை.

பிரயாணிகளின் பார்வை அப்புவின்பால் மொய்த்தது. அவர்கள் ஏதோ சத்தியவசப்பட்டவர்களாய், கொண்டக்டர்பால் பரிவுகொண்டு :

'' ஏனப்பு? கொண்டக்டர் எத்தனை தரம் ரிக்கற் எண்டு கேட்டவர்... நீ என்ன செவிட்டலியனே? பேசாமையிருந்திட்டு இப்ப அருட்டுமுழி முழிக்கிறை. ''

'' இவர் இப்பிடித்தான்போலை. பழக்கப்பட்ட கட்டை. இண்டைக்கு வசமாச் சிக்கீற்றார். ''

'' இந்த வயசிலை ஏனப்பு உனக்கு இந்தப் புத்தி. கள்ளுக்கு மிச்சம் பிடிச்சனியே... அதுதான் மடக்கீற்றார் போலை. ''

சொற்கணைகளின் சொடுக்கல்கள்.

ஒரு பரிசோதகர் அப்புவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு கேட்டார்.

'' அப்பு உண்மையைச் சொல்லு... ஒண்டையும் மறைக்காதை... பஸ்ஸிலை முன்பக்கத்தாலைதானே ஏறினனி...? ''

'' ஓம் தம்பி, பின்பக்க வழியைக் கவனிக்கேல்லை. ''

'' ஏறினதும் ஏன் ' ரிக்கற் ' எடுக்கேல்லை ? ''

'' கேட்டனான். கொண்டக்டர் பொடியன்தான் தரேல்லை. ''

பஸ்ஸே குலுங்கிச் சிரித்தது.

அப்பு அசடுவழிய, இருப்பிடத்தை விட்டெழுந்து எல்லோரையும் பார்த்தபடி ஏதோ பேச முயற்சித்தார். அவரால் முடியவிலலை. குரல் மிகவும் சன்னமாக ஒலித்தது. குரலில் லேசான கரகரப்பு. வெப்பியாரத்துடம் கண்கலங்க, அவர் மிகுந்த சிரமத்துடன் சொன்னார்.

'' தம்பி என்னை மன்னிச்சிடு ராசா. இதைப் பெரிசு படுத்தாமை ரிக்கற்றைத் தந்திடு ''

'' அப்பு...! நானென்ன செய்ய, குற்றப் பணத்தோடை இருபத்தி நாலு ரூபாய் நாப்பதுசதம் வரும். பரிசோதகர்கள் பணத்தை எண்ணிப் பார்த்தார்கள். பதின்மூன்று ரூபாய் இருந்தது. பற்றுக்குறை ஒரு ரூபாய் நாப்பது சதம்.

'' அப்புவின்ரை மடியை ஒருக்கா வடிவாப்பாரும் ஏதென் இருக்கும். ''

இது பஸ் சாரதி.

ஒரு பரிசோதகர் அப்புவை நெருங்கி அவரது மடியைப் பிடித்தார். வெற்றிலைப் பொட்டலம் கீழே விழுந்தது. அத்துடன் சில்லறைகளும் குலுங்கிச் சிதறின.

சரியாக ஒரு ரூபாய் நாப்பது சதத்தை எடுத்துக்கொண்டு, மீதத்தை அப்புவிடம் கொடுத்த பரிசோதகர்கள், பஸ் சத்திரத்தடியில் திரும்பியபோது, குதித்து இறங்கிக் கொண்டார்கள்.

பஸ் சாரதி அப்புவைப் பார்த்து, அடக்கமுடியாமல் குபீரிட்டு விழுந்து விழுந்து சிரித்தார். அப்புவினது செயல் அவரது ரசனைக்கு விருந்தானது எனக்குப் பிடிக்கவில்லை. எரிச்சலாவே இருந்தது.

ஏன் இவர் இப்பிடிச் சிரிக்கிறார்... இதிலை என்ன ரசிப்பு இருக்கிறது. பாவம் அப்பு. ஏதோ மறைத்து வைத்ததையே கொட்டிக் கொடுப்பதற்குக் காரணமாய்விட்ட இந்த மனிதர் சிறிதும் இந்தக் கிழவரிடம் இரக்கம் கொள்ளாமல், கண்ணில் நீர் முட்டும்வரை சிரிப்பது... சே... என்ன மனிதர்கள் ! என்ன ரசனைகள் !

பஸ், நிலையத்தினுள் நுழைந்து தரித்தபொழுது, எல்லாரும் முண்டியடித்துக்கொண்டு இறங்கினார்கள்.

மழை வேகம் குறைந்து பிசுபிசுத்துக்கொண்டிருந்தது.

சாரதியைப் பார்த்தேன். அவர் அப்புவை அணுகி, '' அப்பு என்ன? ஏதும் இருக்கே வீட்டை போய்ச் சேர.. '' என்றவர், தனது மடியிலிருந்து ஓர் ஐந்து ரூபாய் நோட்டொன்றை எடுத்துக் கிழவரிடம் கொடுத்தார்.

எதிர்பாராத நிகழ்ச்சி !

நான் பிரமிப்புடன் அவரையே பார்த்தேன். அவர் சிரித்தபடி அவசரமாக இறங்கி எங்கோ போய்க் கொண்டிருந்தார். அந்த மனிதரை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அவரது அந்தச் சிரிப்பு காதில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டே இருந்தது.

நானும் ஈசனும் பஸ்ஸைவிட்டிறங்கியபொழுது யாரோ முதுகில் தொடுவதுபோன்ற உணர்வு. திரும்பிப் பார்த்தேன்.

கொண்டக்டர் !

'' மாஸ்ரர் என்னை மன்னிச்சிடுங்க... இந்தாருங்க உங்கடை மிச்சம்... இரண்டு ரூபாயும் சில்லறையும் ! ''

ஓ ! இந்த மனிதர்கள் தேவர்கள்தான். என் மனம் ரோமான்ரி 'க்காக அலட்டிக்கொள்கிறது.

'' தம்பிக்கு ஏதாவது நெருக்கடியே? ''

'' இல்லை... நெருக்கடி எண்டாலும் இனி இப்பிடி வேண்டாம் மாஸ்ரர் ''

நான் அவனை மிகுந்த கனிவுடன் பார்த்து விடைபெற்றபொழுது, அப்பு ஏதோ பிதற்றியபடி இறங்கினார்:

'' அந்தப் பொடிச்சீற்ரை தட்டிப் பறிச்சதுக்கு செம்மையாப் பட்டிட்டன்... இது நல்லதுக்குத்தான். ''

' ஆரத்தப் பொடிச்சி, அவளின்ரை எதைத் தட்டிப் பறிச்சவர் ? '

அந்த நினைப்பில் மிதந்த என்னை ஈசன் இடைமறித்தார்:

'' தம்பி ! ஒரு பத்து ரூபாய் தாரும் பிறகு தாறன் ''

'' ஈசன் வாரும் சுபாஸிலை சூடா ஒரு கோப்பி குடிச்சிட்டு அதைப்பற்றி யோசிப்பம் ''

நானும் ஈசனும் இப்பொழுது கோப்பிகுடிக்கப்போகின்றோம்.

ஈசன் இன்று எனது விருந்தாளி. நாளை யாராவது அவருக்கு நிச்சயமாக இருப்பார்கள். அது அவரிடம் நாப்பது ரூபாய் திருடிய அந்த அழகியாகக்கூட இருக்கலாம். யார் கண்டது. அவர் திறமை அப்படிப்பட்டது. அவர் ஓர் ஆச்சரியமான மனிதர் !

இல்லை, அவரும் நொடிந்துபோன ஒரு பிச்சைப்பெட்டி ●

முன்னிலும் வசீகர விளம்பரங்களை கொண்ட
பொலிவுள்ள மலர் தயாரிக்கப்படுகிறது
உங்கள் விளம்பரங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்

ஒருசில கெடுதலற்ற, சாதாரணப் பொருட்கள் பலவித அசௌகரியங்களை உண்டாக்கினால் அது ஒவ்வாமை அல்லது அலர்ஜி எனப்படுகிறது. சிலருக்கு ஒருசில சோப்புகள் ஒத்துக் கொள்வதில்லை. அந்த சோப்புகளைப் போட்டால் உடம்பில் தடிப்புத் தடிப்பாக வருகிறது என்பார்கள். சிலருக்குப் பூக்களை முகர்ந்தால் தும்மலோ தும்மல்! இன்னும் சிலருக்கு வாதுமைப் பருப்பை, சில பழங்களை, முட்டை போன்றவற்றை உண்டால் பேதியாகிறதாகக் கூறுவார்கள்.

ஒவ்வாமையின் அறிகுறிகள் பல: கண்களில் அரிப்பு, நீர்வடிதல், மூக்கு ஒழுகுதல், இருமல், மூச்சுவிடச் சிரமம், தோலில் படை, தடிப்பு, அரிப்பு, குமட்டல், இசிப்பு, என அதிர்ச்சி வரை போய் நிற்கும். ஆளுக்கு ஆள் இது மாறுபடும். உடலின் எந்தப் பகுதியும் இதனால் பாதிக்கப்படலாம். எந்தப் பொருளும் ஒவ்வாமையை உண்டாக்கலாம்.

ஒவ்வாமையை உண்டாக்கும் அலர்ஜன்கள் : (Allergens)

ஒவ்வாமை எதிர்விளைவுகளை உண்டாக்கும் பொருட்கள் ஒவ்வாமைக் கூறுகள் (அலர்ஜன்கள்) எனப்படுகின்றன. அலர்ஜி நோயாளியின் உடலில் கிருமி போன்றவை புகும்போது எதிர்ப்பொருள்கள் (antibodies) உற்பத்தியாகும். ஒவ்வாமைக்கூறுகளை செயலிழக்க வைக்க வேண்டியது இந்த எதிர்ப்பொருள்களின் வேலை. இந்த ஒவ்வாமைக் கூறுகளை எதிர்க்கும்போது உடலின் நோய் எதிர்ப்பு அமைப்பு கொஞ்சம் அதிகப்படி எச்சரிக்கை காட்டிச் செயல்படுவதால் இரத்தவோட்டத்தில் சில வேதிப் பொருட்கள் குறிப்பாக ஹிஸ்டாமைன்கள் (histamines) அளவுக்கு மீறி கலந்துவிடுவதால் அசௌகரியங்கள் அலர்ஜிகளாகத் தோன்றுகின்றன.

அலர்ஜன்களை பின்வருமாறு வகைப்படுத்த முடியும் :

- *மூச்சு மண்டலத்தைத் தாக்குபவை :* பூந்தாதுகள், தூசி, புகை, நறுமணப் பொருட்கள் (பெயிண்ட் முதலானவை) இவை தும்மல், இருமல், மூச்சு விடுவதில் சிரமத்தை உண்டாக்குகின்றன.
- *செரிமான மண்டலத்தைத் தாக்கும் உணவுப் பொருட்கள் :* முட்டை, கடல் உணவுகள் (மீன், எறால்) கொட்டைகள், பழங்கள், சாக்லேட், பன்றி இறைச்சி முதலியன இவை குமட்டல், பேதி போன்றவைகளை உண்டாக்குவதோடு தோலில் படைகளையும், குருக்களையும் உண்டாக்குவன.
- *மருந்துகள் :* பெனிசிலின் அல்லது குறிப்பிட்ட ஸீரம் (Serum) பயன்படுத்தப்பட்ட தடுப்பு ஊசி மருந்துகள்.
- *தோலிலும் கோழைப்படலங்களிலும் செயல்படுபவை:* பலவில நச்சுச் செடிகள், பூச்சி மருந்துகள், குறிப்பிட்ட சில வேதிப்பொருட்கள் சேர்ந்த டைகள் (Dyes) ஒப்பனைப் பொருட்கள், சோப்புகள், உலோகங்கள், மென் மயிர்ப்பொருள்கள்.
- *சுற்றுசூழல் காரணிகள் :* சூரியவொளி, அளவுக்கு மீறிய குளிர், வெளிச்சம், அழுத்தம் முதலியன.
- *நுண்மங்கள் :* குறிப்பிட்ட சில பாக்டீரியாக்கள், வைரஸ்கள், ஒட்டுயிரிகள் முதலியன

மருத்துவம் :

சில அலர்ஜிகள் சிறுவயது முதலே வெளிப்படையாகத் தெரியும். பிற வயதுக்கு வரும்வரை வெளியில் தெரிவதில்லை. பலர் விஷயத்தில் தொல்லை தரும் பொருளை எளிதாகக் கண்டறிந்து தவிர்க்கலாம். பிறர் விஷயத்தில் அலர்ஜன்களை முடிவு செய்யப் பல சோதனைகள் செய்ய வேண்டியது இருக்கும்.

அப்படிக் கண்டுபிடித்தவுடன் ஒவ்வாமை உள்ளவர் அவற்றைத் தவிர்த்துவிடுவதுதான் நல்லது. மருத்துவர்களால் அலர்ஜியைக் கட்டுப்படுத்தும் மருந்துகளைத் தந்து பிரச்சினையைக் குறைக்க முடியும். மருத்துவத்திற்கு எதிர்த்து நிற்கும் அலர்ஜிகளும் அட்ரீனலின், எபிட்ரின், கார்டிசோன் அல்லது ஆன்டிஹிஸ்டாமைன்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட அலர்ஜிக் கூறுக்குக் கடுமையான அலர்ஜித் தாக்குதலுக்குள்ளானவர்கள் எவரும் அதுபற்றிய விவர அட்டையைக் கையோடு எடுத்துச் செல்வது நல்லது.

ஒவ்வாமைத் தொடர்புடைய மூச்சு மண்டல நோய்கள்...

வேனிற்கால தூசி சளிக் காய்ச்சல் (Hay fever or allgergic rhinitis) மற்றும் ஆஸ்த்துமா ஆகிய இரண்டும் பொதுவான மூச்சுமண்டல ஒவ்வாமை நோய்கள். இரண்டுமே தாக்குதல், வெளிப்படும் பருவங்கள், காரணங்கள் போன்றவற்றில் மிகவும் பொதுவானவை தூசிக் காய்ச்சல் மூச்சுமண்டலத்தின் மேல் பகுதியில் உள்ள கோழைப் படலத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள மூச்சுக்குழல்கள் தொடர்பானது. இரு பெரிய வகை ஆஸ்த்துமாக்களை மருத்துவர்கள் பிரித்தறிகிறார்கள். ஒன்று அலர்ஜி சார்ந்தது மற்றது தொற்றும் தன்மையுடையது. தொற்றும் தன்மையுடைய ஆஸ்த்துமா மூச்சுக்குழல் அழற்சியைப் (Bronchitis) போன்றது. இருமலும் இழுப்பும் காணப்படும். இங்கு அலர்ஜி தொடர்பான ஆஸ்த்துமாவைப் பார்ப்போம்.

தூசிக் காய்ச்சலும் ஆஸ்த்துமாவும் அலர்ஜிப் பொருட்களின் தாக்குதலால் வருபவை, பொதுவாக இவ்வலர்ஜிக் கூறுகள் காற்றில் வருபவையே என்றாலும் உணவின் மூலமும் வரும். பெரும்பாலான கேசுகளில் தாவரங்களின் பூந்தாதுகளே. பூந்தாதுகளை அல்லது மகரந்தத் துகளை மூக்கின் வழியே உள்ளிழுக்கையில் மூச்சுக் குழாய்களின் உள்ள கோழைப்படலங்களில் படரும். அலர்ஜி உடையவர் உடலில், எதிர்ப்பொருட்கள், இப்பூந் தாதுகளிலுள்ள புரோட்டீன்களுக்கு எதிர்விளைவை உண்டு பண்ணுகின்றன. இதனால் அருகிலுள்ள திசுக்களிலிருந்தும், இரத்தச் செல்களிலிருந்தும் பல்வேறுப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. இப்பொருள்கள் நாளடைவில் அப்பகுதியிலுள்ள இரத்தக் குழாய்களில் இரத்தக்கட்டு உண்டாகி, கோழைமிகும் மூக்கடைப்பு அல்லது மூக்கு ஒழுகல், கண் அரிப்பு போன்ற எரிச்சல் அறிகுறிகள் உண்டாகும். ஆனால் அவ்விடங்களில் வெளிப்படுத்தப்படும் பொருள் மூச்சுக்குழல் தசைகளை சுருங்கச் செய்யும். இதனைத் தொடர்ந்து அவை குறுகலடையும். இவ்வாறு மூச்சுக்குழல்கள் குறுகல் அடைவதும் அவற்றில் கோழை படிவதும் ஆஸ்துமாவில் இரைப்பை உண்டாக்குகின்றன.

வேனிற்கால தூசிக் (சளிக்) காய்ச்சல் :

வேனிற்கால தூசிக் காய்ச்சல் உயிருக்கு அச்சுறுத்தலாக இருந்ததில்லை எனினும் கடுமையான கேசுகளில் ஒருவருடைய வாழக்கையைப் பெருமளவில் அது பாதிக்கும். இக்கோளாறு குழந்தைப் பருவத்தில்தான் பொதுவாகக் காணப்படுகிறது. உடன் எக்சீமா அல்லது ஆஸ்த்துமாவும் இருக்கும். தூசிச் சளிக்காய்ச்சல், எக்சீமா, ஆஸ்த்துமா போன்றவை மரபு வழியாகவும் வரக்கூடும். இம்மரபு வழிக்காரணிகள் சிக்கலானவை. எனவே ஒரு குடும்பக் குழுவினரில் யார் வேண்டுமானாலும் இதற்கு ஆளாகலாம். ஆளாகாமலும் இருக்கலாம்.

தூசிக் (சளிக்) காய்ச்சல் உடையவர்கள் வேனிற்காலத்தில் மட்டும் அல்லது பெரும் அளவில் துன்பமடைகின்றனர். ஏனெனில் மரங்கள், புல், பூக்கள் யாவும் அப்போதுதான் எங்கும் காணப்படுகின்றன. பூந்தாதுகளால் பாதிக்கப்படுபவர்கள் முடிந்தவரை அவற்றைத் தவிர்க்கவும், தூய காற்றை உள்ளிழுக்கவும் முயல வேண்டும். ஆன்டிஹிஸ்டாமைன் (Antihistamine) மருந்துகள் மூக்கடைப்பை எதிர்த்துச் செயல்படப் பயன்படுத்தப் படுகின்றன. இம்மருந்துகள் உடலில் உண்டாகும் அலர்ஜி உடைய மனிதரின் உடலில் எதிர் விளைவாக வெளியிடப்படும் ஹிஸ்டாமைன்களின் விளைவுகளை எதிர்த்துச் செயல்படுகின்றன.

அலர்ஜி தொடர்பான ஆஸ்த்துமா :

அலர்ஜி தொடர்புடைய ஆஸ்த்துமாவானது மூக்கிலுள்ள கோழைப்படலங்களில் அல்லாமல் மூச்சுக் குழல்களில் உள்ள கோழைப்படலங்களில் ஒவ்வாமை எதிர் விளைவுகள் உண்டாவதால் வருவது. ஒருவர் ஆஸ்த்துமா தூசிக் காய்ச்சல் இரண்டாலுமே துன்பப்படக்கூடும். பூந்தாதுகள், செல்லப்பிராணிகளின் முடிகள், (குறிப்பாக பூனை) வீட்டிலுள்ள தூசி, அழுக்குகள் சிலவகை உணவுகள் (குறிப்பாக நத்தை, சிப்பி முதலியன) யாவும் பொதுவான காரணிகள். உணவுகளால் அலர்ஜி என்றால், முதலில் இரத்த ஓட்டத்தில் தொடங்கி இலக்கு உறுப்பாகக் கருதப்படும் நுரையீரலில் பெருமளவு தாக்குதல் காணப்படும்.

ஒவ்வாமை ஆஸ்த்துமாக்கள் பெரும்பாலும் சிறுபிள்ளைகளிடம்தான் காணப்படுகிறது. பருவம் எய்துகிற நிலையில் இது தானாக விடைப்பெற்றுச் சென்று விடுவது எதனால் என்று தெரியவில்லை. பருவம் எய்திய பின்னரும் துன்புறுகிறவர் விஷயத்தில் தொற்றுக் காரணமாக ஆஸ்த்துமாத் தாக்குதல்கள் திடீரென்று தொடங்கி மருந்துகளால் எளிதாக விலகுகின்றன.

ஆஸ்த்துமா உடையவர்களுக்கு பெரும்பாலான நேரங்களில் அறிகுறிகள் காணப்படுவதில்லை. பூந்தாதுகள் மிகுந்த இடத்தில் இருக்கும்போது மூச்சுக் குழாய்கள் மூலம் மூச்சை வெளியிடுவதால் இரைப்புச் சத்தம் விசிலடிப்பது போல அல்லது கொய்ங்..... கொய்ங்..... என்று வலுவாகக் கேட்கும். இரைப்புடன் கோழையும் மூச்சுவிடுவதில் சிரமமும் இருக்கும். தாக்குதலின் தன்மையைப் பொறுத்து இவற்றின் கடுமை மாறுபடும். மிதமான ஆஸ்த்துமாத் தாக்குதல்கள் தளர்ச்சி நிலை அடைந்ததும் தாமாக வற்றி விடும். புகை மண்டலம், குளிர்காற்று அல்லது உடற்பயிற்சி என ஏதாவது ஒரு காரணத்தால் இரைப்புத் தோன்றும்போது இவ்வாறு தாமே மறைந்துவிடுகின்றன. ஆஸ்த்துமாக்காரர்களின் மூச்சுக் குழாய்கள் அதிகக் கூருணர்வு உடையவை. பலவிதமான பொருள்களால் அவை வெகு எளிதாகத் தொல்லைக்குள்ளாக்கும்.

மருத்துவம் :

மிகக் கடுமையான ஆஸ்த்துமாத் தாக்குதல்களுக்கு, வெவ்வேறு வகை மருத்துவங்கள் உள்ளன. மூச்சுக் குழல்களை விரிவடையச் செய்து ஒவ்வாமை எதிர்விளைவுகளை அடக்கி வைக்கும் வாய்வழி அருந்தும் மருந்துகள் உள்ளன. ஆன்டிஹிஸ்டாமைன்கள் ஆஸ்துமாவுக்கு பலனளிப்பதில்லை. உள்ளதைக் கேடாக்கவுங்கூடும். அட்ரீனலின் போன்ற ஊசி மருந்துகளும் அட்ரீனலின் (adrenaline) போன்ற பொருள்கள் கலந்த உள்ளிழுக்கும் தூவல்களும் (ஸ்பிரே) கிடைக்கின்றன. இம்முறைகளில் எதையும் அல்லது எல்லாவற்றையும் மருத்துவர் மூலம் பயன்படுத்திப்பார்க்கலாம். அளவுக்குமீறி அலர்ஜிக்கூறுகளுக்கு ஆளாகும் நேரங்களில் தொடர்ச்சியாக வாய்வழி மருந்துகளை குறிப்பிட்ட கால அளவுகளில் எடுத்து இரைப்புகளைத் தவிர்க்கலாம்.

ஆஸ்த்துமாவுக்கும் வேனிற்கால (சளி) தூசிக் காய்ச்சலுக்கும் சிறந்த மருத்துவம் அவற்றை உண்டாக்கும் அலர்ஜின்களைத் தவிர்ப்பது ஆகும். பூந்தாதுகளையும் பிற காற்றில் பரவும் பொருள்களையும் தவிர்க்க முடியாவிட்டாலும் பூனைகளையும் குறிப்பிட்ட சில உணவுகளையுமாவது தவிர்க்கலாம். முதலில் காரணம் என்னவென்று கண்டுபிடிக்கவேண்டும். நோயாளியின் மருத்துவக் குறிப்பை – நோய் வரலாறு – காண்பது இதைக் கண்டறிய ஒரு முக்கியமான வழிமுறை. ஒரு குறிப்பிட்ட பூக்கள் மலரும் பருவங்களில் இப்படி ஆகிறது என்று நோயாளி சொல்லும்போது சில நேரங்களில் சிக்கல் வெகு எளிதாகத் தீர்கிறது. பிற நேரங்களில், நிறைய துப்பறியும் வேலை

செய்தாக வேண்டியுள்ளது. தோல் சோதனைகள் கதையைச் சரிபார்க்க உதவும். தோலில் கீறல் உண்டாக்கி அலர்ஜன்கள் என ஐயப்படும் பல்வேறு பொருள்களைவிட்டுப் பார்க்கவேண்டும். இவற்றிற்கு எதிர்பொருள்கள் உருவானால் தோலில் தடிப்புகள் தோன்றும். இப்படி எதிர்விளைவு தோன்றிவிடுவதாலேயே அதுதான் ஆஸ்த்துமாவுக்குக் காரணம் என முடிவு கட்டிவிட முடியாது. ஏனெனில் பலருக்கு இதுபோன்று எதிர்விளைவு உண்டானாலும் தூசிக் காய்ச்சலோ ஆஸ்த்துமாவோ இருப்பதில்லை. தோல் சோதனைகளையும் நோயாளியின் நோய் வரலாற்றையும் ஒப்பிட்டுச் சரி பார்க்க வேண்டும்.

இனங்காணப்பட்ட பொருளைத் தவிர்க்க முடியாதெனில், அதனால் ஏற்படும் கூருணர்ச்சியைக் குறைப்பது பயனுள்ளது என மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகை மருத்துவம், மனித உடல் ஒரு பொருளுக்கு எந்த அளவுக்குத் தொடர்ந்து ஆளாகிறது என்பதைச் சார்ந்து அதன் எதிர்விளைவு மாறுபடும் என்பதைச் சார்ந்து அதன் எதிர்விளைவு மாறுபடும் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கூருணர்வு குறைக்கும் திட்டத்தில், பூந்தாது அல்லது வேறு சாறுகள் அவ்வப்போது சிறு அளவில் ஊசி மூலம் உட்செலுத்தப்படும்.படிப்படியாக இப்படிச் செலுத்தும் அளவு அதிகரிக்கும். இந்த வழிமுறையின் மூலம் பல அலர்ஜிக்காரர்கள் தங்களுக்கு ஒவ்வாத பொருட்களுக்கு ஓரளவுக்கு ஆளானாலும் சிறிதளவு அறிகுறிகளுடன் அல்லது முற்றிலும் தப்பித்துக்கொள்கின்றனர். கூருணர்வு குறைப்பது எல்லாரிடமும் வெற்றியடைவதில்லை. பிற முறைகள் வெற்றிபெறாத நிலையில் செய்து பார்க்கத் தகுதியானது அது. ●

தேன்

தேன் நல்ல தேன்தானா என்று நிரூபிக்க ஒரு தம்பளரில் நீர்ஊற்றி அதில் தேனைச் சிறிது சிறிதாக ஊற்றினால் அடியில் தங்கிவிடும்; இது நல்ல தேன்; தண்ணீருடன் கலந்தால் அது போலித் தேன் !

உருளைக் கிழங்கு

உருளை இஞ்சி, பூண்டு அதிகம் சேர்த்து தயாரித்தால் வாயுத்தொல்லை வராது. சிறுநீர் நன்கு பிரியும். தாய்ப்பால் சுரக்கும். உற்சாகம் உண்டு பண்ணும். இதை நெய்யில் தயாரித்து உண்டால் மெலிந்த தேகம் வலுப்பெறும். இச்சாற்றை தனியாகவோ, தேன்கலந்தோ முகத்தில் பூச அழகுபெறும். கண்ணுக்கு கீழே தோன்றும் கருமை நிறம் போகும்.

RATNA & COMPANY SOLICITORS
(London)

• Immigration and Nationality Law • Work Permit Applications • Highly skilled migrant programme • Tourist visa application and extensions • Student visa applications and extensions • Permenant resident applications if you have lived in the UK for 7/10/14 years • Asylum applications and appeals • Human Rights applications • Bail and detention matters • European citizens applications • Sponsership Declarations • Family Reunion applications • Houses Flats and Business buying selling and re-mortgaging • Traffic offences • Cases before Magistrates Court and County Court • Drafting Will • Drafting Power of Attorney • We are authorised by the Legal services Commission to provide free legal advice.

We are also able to assess your knowledge in English Language for Nationality applications

Contact :

Mr. M. or Mrs. K. Ratnapalan 169, High Street North, East ham, London E6 1JB

Tel: 020 - 8470 8818, Fax: 020 - 8475 0131

Mobile: 07906 862 292 [Mr.Ratna], 07769 748409 [Mrs. Ratna]

email: k_ratna@ratna.co.uk or mratnapalan@hotmail.com web: www.ratna.co.uk

சிவம் பரப்பும் சீலர் சிவானந்த சோதி
பேரூர் அடிகளார் வழங்கிய பெருஞ்சிறப்பு

தமிழ்ச் சைவ தனி ஞாயிறாகக் கதிரொளி பரப்பிவரும் சீலர் சீர் வளர் சீர் பேரூர் அடிகளாரின் முத்து விழா பேரூரில் கோலாகலமாக நடைப்பெற்றது. உலகெங்கும் இருந்து சைவ நன்மக்கள் திரண்டு வந்து வழிபாடும் வணக்கமும் செய்தது கண்கொள்ளாக் காட்சியாக மிளிர்ந்தது. அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் விழா நிகழ்ச்சிகள் நடந்தன.

இலண்டன் மாநகரத்திலிருந்து திருக்கோயில் செயலர் பலர் வந்திருந்தனர். சமயப் பணியும், பொதுத் தொண்டும் இரு கண்களாகக் கொண்டு ஈடில்லாப் பணியாற்றும் தமிழர் தகவல் பதிப்பாசிரியர் திரு. நா. சிவானந்த சோதி அவர்கட்கு பொன்னாடைப் போர்த்தி சிவம் பரப்பும் சீலர் என்ற பட்டம் வழங்கி பேரூர் அடிகளார் பாராட்டினார். தென்கயிலாத்தைச் சேர்ந்த ஈழத்தின் இணையில்லாத் தொண்டர் திரு. சிவானந்த சோதிக்கு இந்த விருது வழங்கியது ஈழக் கைலாயத்துக்குக் கிடைத்த பாராட்டாகும்.

ஒளைவை நடராசன்
சென்னை
02.10.2005

பொருள் நிறைந்த வாழ்க்கைக்கு பொலிவார்ந்த திருக்குறள்
அறிஞர் பேரம்பலம் அவர்களின் ஆங்கிலத்திலாலான மொழியாக்கம்



பேரம்பலம் அவர்கள் அமெரிக்காவில் வாழ்ந்து வருகிறார். இவர் தமிழ் ஈழம் பருத்துத்துறை துன்னாலையை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மிக அழகாக ஆக்கியுள்ளார்.

159. There are extremists of a certain bent of mind
Who inflict wounds with cruel words, unkind
If you can endure them with great equanimity
It is holier than any ascetic's austerity :
For ascetics do contend, but with their own propensity While pacifists have to confront others' shocking verbal battery !

160. Those who renounce and do penance deserve due recognition Though what they do is their own concern, for their own edification But those who are targets of verbal arrows, yet forbear them with fortitude Deserve far greater praise for their calm and serene attitude For, their is sufferance, not self-imposed, but imposed from outside.

159. 160க்கான குறளை பக்கம் 6இல் பார்க்கவும்



அக்டோபர் 02 : காந்தியடிகள் பிறந்த தினம்

காந்தி ஏன் மகாத்மா?

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த சமயத்தில் நடந்த உண்மை நிகழ்ச்சி இது.

ஒருமுறை காந்திஜி ஒரு இரயிலைப் பிடிப்பதற்காக வேகமாக வந்துக் கொண்டிருந்தார். அவ்வாறு ஓடிவந்து வண்டியில் ஏறும்போது அவரது இடதுகால் செருப்பு தவறி இரயிலை விட்டு கீழே விழுந்தது. இரயில் விரைவாக சென்றுக் கொண்டிருந்தது. காந்திஜி சற்றும் தாமதிக்காமல் தனது மற்றொரு கால் செருப்பைக் கழற்றி தான் தவறவிட்ட செருப்பின் அருகே தூக்கி வீசினார்.

அந்த இரயில் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகளுக்கு காந்தியின் இந்தச் செய்கை வியப்பைத் தந்தது.

ஒரு பயணி காந்திஜியை அணுகி பாபுஜியிடம், தாங்கள் தங்களது செருப்பை ஏன் அவ்வாறு வீசினீர்கள்? என்று வினவினார்.

அதற்கு மகாத்மா,

ஐயா, ரயிலில் நான் ஏறும்போது எனது இடதுகால் செருப்பு தவறிவிட்டது. அதை நான் திரும்பவும் எடுக்க முடியாது. பின்னர் எனது வலது கால் செருப்பை மட்டும் வைத்துக்கொள்வதில் பலனில்லை. எனவேதான், தவறவிட்ட எனது செருப்பின் அருகிலேயே மற்றொரு கால் செருப்பையும் விட்டெறிந்தேன். அந்த வழியாக யாராவது வரும்போது என் இரண்டு செருப்புகளும் தென்பட்டால் அவருக்காவது பயனாய் இருக்குமே என்றார். பிறருக்குப் பயன்பட வேண்டும் என்ற பெரிய எண்ணம்தான் அவரை மகாதமாவாக ஆக்கியது !

மலிவு விலையில்
பொருட்களை விற்பது
எப்படி?
அடுத்த இதழைப்
பார்க்கவும்

திருமணங்கள் சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுகின்றன – *பொன்மொழி*

அவ்வளவு உசரத்துல தப்பு நடந்தா நாம என்ன
தடுக்கவா முடியும் ? – *பதில் மொழி*

Chellappa & Co. Ltd.

LEGAL CONSULTANCY, ACCOUNTANCY & TAX SERVICES

Legal : We have expertise with many years experience in providing excellent advise and assistance in respect of all legal matters including civil litigation.

பல வருட அனுபவமும் திறமையும் உள்ள சட்ட ஆலோசகர்களினால் சகலவிதமான சட்டத் தேவைகளுக்குமான ஆலோசனைகளை வழங்குவதுடன், அதற்கான உதவிகளையும் உங்கள் திருப்திகேற்ப சட்ட வரையறைக்குட்பட்டு மிகச் சிறந்த முறையில், குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து தரவுள்ளோம். எனவே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

Accountancy : We offer a fast, friendly and reliable accounting service for small and meidum sized businesses including preparation of VAT, TAX returns and Annual Accounts.

நீண்டகால அனுபவமும் தொழில் நுட்பமும் தெரிந்த கணக்காளர்களும், கணக்குப் பதிவாளர்களும், உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களின் கணக்கியல் சேவைகளை மிகத் துரிதமாகவும் நேர்த்தியாகவும் செய்து தருவதற்கு உடனே எங்களை நாடுங்கள்.

Special allowance will be given for start-up business, contact us for friendly advice

Mr K Chelva-Nayagam LLB
Manager
Mob : 07956 466 708
265 Haydons Road Wimbledon London SW19 8TY
Tel : 020 8542 7111 Fax : 020 8542 9770
Email: chellappa@tiscali.co.uk

உணர்வும் உப்பும்

‘ உப்புப் பெறாத வேலை ’ என்று ஒன்றுக்கும் பயனற்றதைக் குறிப்பிடுகிறார்கள். (உணர்ச்சியற்றவனை உப்புப் போட்டுத்தான் சாப்பிடுகிறாயா ? என்றும் கேட்கிறார்கள்) அதே நேரத்தில் மனித குல வரலாற்றில் உப்புக்குத் தனி இடம் உண்டு. மனிதனின் நாகரிக வளர்ச்சியில் நெருப்பை உருவாக்கக் கற்றதுபோல உப்பினைப் பயன்படுத்தக் கற்றதும் ஒரு முக்கியமான நிகழ்ச்சிதான். அப்போதுதான் வேதியியல் என்ற விஞ்ஞானம் தொடக்கம் பெறுகிறது.

உப்பு என்ற தமிழ்ச் சொல்லுக்குச் ‘ சுவை ’ என்றுதான் பொருள். இனிப்பு, கசப்பு, துவர்ப்பு என்று சுவைகளெல்லாம் உப்பு என்ற சொல்லை அடியாகக் கொண்டேப் பிறந்தவை. சமையலுக்குப் பயன்படுத்தப்படும் உப்பிற்கு ‘ வெள்ளுப்பு ’ என்று பெயர். பழந்தமிழ் நாட்டுப் பொருளாதாரத்திலும் தமிழ்ப் பண்பாட்டிலும் உப்புக்குத் தனி இடம் உண்டு. பழந்தமிழர்களால் சுவையின் சின்னமாகவும் வளத்தின் சின்னமாகவும் உப்பு கருதப்பட்டது. தன் உருவம் தெரியாமல் பிற பொருள்களோடு கலந்து பயன்தருவது ‘ வெள்ளுப்பு ’ ஆகும்.

செய்த வேலைக்கு மாறாக நெல்லும் (சம்பாவும்) உப்பும் (அளத்தில் விளைவது) கொடுத்த வழக்கத்தினால்தான் ‘ சம்பளம் ’ என்ற சொல் பிறந்தது என்பர் சிலர். ஆங்கிலத்திலும் salary என்ற சொல் salt என்பதன் அடியாகப் பிறந்தது என்றும் கூறுவர்.

இன்றும் தமிழ் நாட்டில் பெரும்பாலான சாதியாரிடத்தில் புது மணமகள் தன் கணவன் வீட்டிற்குள் நுழையும்போது ஒரு சிறு ஓலைகூடையில் உப்பை எடுத்துக்கொண்டே நுழைகிறாள். அது போலவே புதுமனைப்புகுவிழாக்களில் உறவினர்கள் அரிசியினையும் உப்பினையும் அன்பளிப்பாகக் கொண்டு வருவர். மதுரை மாவட்டக் கள்ளர்களில் ஒரு பிரிவினர் திருமணத்தை உறுதி செய்யும்போது மணமகன் வீட்டில் இருந்து அரிசியும் உப்பும் கொண்டு செல்கின்றனர்.

ஒருவர் இறந்த எட்டாவது அல்லது பத்தாவது நாளில் இறந்தார்க்குப் படைக்கும் உணவுகளை உப்பில்லாமல் செய்யும் வழக்கம் இன்னமும் பல சாதியாரிடத்து இருக்கின்றது. உப்பு உறவின் தொடர்ச்சிக்கு உள்ள ஒரு குறியீடு ஆகும். இறந்தாரோடு உள்ள தொடர்பை அறுத்துக் கொள்ளவே இவ்வாறு செய்கிறார்கள். உப்பு நன்றி உணர்ச்சியின் தோற்றுவாய் ஆகவும் கருதப்படுகிறது. ‘ தின்ற உப்பிற்குத் துரோகம் செய்வது ’ என்பது நன்றி மறந்ததனைக் காட்டும் வழக்கு மொழி.

நன்றி கெட்ட வீதுரா – சிறிதும்
நாணமற்ற வீதுரா
தின்ற உப்பினுக்கே – நாசம்
தேடுகின்ற வீதுரா

என்று பாஞ்சாலி சபதத்தில் பாரதி இந்த நம்பிக்கையைப் பதிவு செய்கிறான்.

பழந்தமிழ் நாட்டின் மிகப் பெரிய சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக உப்புதான் விளங்கியிருக்கிறது. கடற்கரையில் விளையும் உப்பினை வண்டியில் ஏற்றிச் செல்லும் ‘ உமணர் ’ என்ற வணிகர்களைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த அழகர் மலைத் தமிழ்க் கல்வெட்டு உப்பு வணிகன் ஒருவனையும் குறிக்கிறது.உப்பு விளையும் களத்திற்கு ‘ அளம் ’ என்றும் பெயர். பெரிய உப்பளங்களுக்கு அரசர்களின் பட்டப் பெயர்களைச் சூட்டியிருப்பார்கள். அவை பேரளம், கோவளம் (கோ+அளம்) என்ற பெயர்களில் வழங்கப்பட்டுள்ளன. சோழ, பாண்டிய அரசர்கள் உப்புத் தொழிலை அரசின் கட்டுக்குள்ளேயே வைத்திருக்கிறார்கள். ‘‘ ஜடாவர்மன் திரிபுவனச் சக்ரவர்த்தி சுந்தர பாண்டியன் காலத்தில் (கி.பி 1268) அதும்பூர் என்னும் ஜனனாதப் பேரளம், செல்லூர் என்னும் அனபாய சோழப் பேரளம், இடையன் குழி என்னும் இராஜேந்திர சோழப் பேரளம், கூடலூர் என்னும் ராஜநாராயணப் பேரளம், திருநல்லூர் என்னும் கிடாரம் கொண்ட சோழப் பேரளம், வெண்ணாரிகன் சுழி என்னும் ஏழிசை மோகன் பேரளம், சூரைக்காமு என்னும் ஆளப்பிறந்தான் பேரளம் ஆகியவற்றிலிருந்து உப்பு விற்கையில் ஒரு உறை உப்புக்கு ஒரு உழக்கு உப்பு என்னும் விகிதத்தில் சேகரித்துத் திருவதிகை திருவீரட்டானேஸ்வரர் கோயில் திருவமுது படிக்கும், கோயில் சீரமைப்பிற்கும் நிவந்தமாக அளிக்கப்பட்டிருக்கின்றன ’’ என்று தொல்லியல் அறிஞர் நடன காசிநாதன் எடுத்துக் காட்டுகிறார்.

போக்குவரத்து வசதிகள் பெருகாத அக்காலத்தில் உப்பின் விலையும் அதிகமாகவே இருந்திருக்கிறது. ‘‘ நெல்லின் நேரே வெண்கல் உப்பு ’’ என்று பெண் ஒருத்தி விலைகூறி உப்பு விற்பதனைச் சங்க இலக்கியத்தில் பார்க்கிறோம். சோழர் காலத்திலும் நெல்லின் விலையும் உப்பின் விலையும் அருகருகு இருந்தன என்று கல்வெட்டுகளில் இருந்து தெரிகிறது. இன்றையப் பொருளாதாரக் கணக்கில் உப்பின் விலை இப்போது உள்ளதைவிட ஐந்து மடங்கு அதிகமாக இருந்ததாகக் கொள்ள வேண்டும். உப்பு உலோகத்தை அரிக்கும் தன்மை கொண்டதனால் ‘ மரவை ’ எனப்படும் மரச்சட்டியிலும் ‘ கல்மரவை ’ எனப்படும் மாக்கல் சட்டிகளிலும் வீடுகளில் உப்பு இட்டு வைக்கப்பட்டிருக்கிறது. இப்பாத்திரங்கள் இப்போது பண்பாட்டு எச்சங்களாக விளங்குகின்றன.

தமிழ்நாட்டின் சமூகப்படிநிலைகளை அடையாளம் காட்டும் பொருள்களில் ஒன்றாகவும் உப்பு விளங்கியுள்ளது. ஆக்கிய

சோற்றோடு உப்பைச் சேர்த்து உண்பது ஒரு வழக்கமாகும். சாதிய ஒடுக்குமுறை கடுமையாக இருந்த அக்காலத்தில் ஒடுக்கப்பட்ட சாதியார், சோறு உலையில் இருக்கும்போதே அதில் உப்பையிடும் வழக்கத்தைக் கொண்டு இருந்தனர். இலையில் தனியாக உப்பிட்டு உண்ணும் வழக்கம் மேட்டிமையின் சின்னமாகக் கருதப்பட்டது போலும்.

உப்பு வரிக்கு எதிராகக் காந்தி சட்டமறுப்பைத் தொடங்கிய காரணம், உப்பு வணிகம் அனைத்து மக்களையும் (சாதி, சமயம், வர்க்கம் தாண்டி) பாதிக்கக்கூடியது என்பதுதான். உப்பிற்கு இருக்கும் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் குறியீட்டுச் சிறப்பினையும் சுட்டி அரசும் ஓர் அரசா என்று கேள்வி எழுப்பி ஆங்கிலேய அரசு ஆளத் தகுதியற்றது என அதன் தகுதிப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கியது தேசிய இயக்கம்.

காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகமும், தண்டி யாத்திரையும் இந்திய அரசியல் வரலாற்றின் அழுத்தமான பக்கங்களாகும். தண்டி யாத்திரை நடந்த குசராத்தில் சில ஆண்டுகளுக்கு முன் வெளிநாட்டு நிறுவனமான ' கார்கில் ' கம்பெனிக்கு மைய அரசு உப்புத் தயாரிக்க அனுமதி வழங்கியது. குசராத் மக்கள் ஜார்ஜ் பெர்னான்டஸ் தலைமையில் இந்த அனுமதியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ததும், இறுதியில் ' கார்கில் ' நிறுவனம் பின்வாங்கியதும் இந்திய வரலாற்றின் வெப்பம் மிகுந்த பக்கங்களாகும்.

நன்றி : அறியப்படாத தமிழகம்



மரபில் ஊறிய சங்கீதத்தை கேட்க வேண்டுமா? மாபெறும் கலைமாமனி மணக்கால் ரங்கராஜன் வழங்கும் மாபெறும் இசைக்கச்சேரி லண்டனில் மார்கழி, தை மாதங்களில் நடைபெற உள்ளது. 81 வயது அகவை உடைய இவர் இலண்டனில் கச்சேரி நடத்துவதற்கு இசைந்துள்ளார். கர்நாடக இசைப் பிரியர்கள் இந்த நிகழ்ச்சியை கேட்க ஒரு அரிய சந்தர்ப்பத்தை பத்மநாப ஐயா அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறார். இது பற்றிய விபரம் அறிய அவரிடம் தொடர்பு கொள்ளவும்.

அவரது தெலைபேசி இலக்கம் : 0208 472 8323

பூவில் மூன்று வகை உண்டு. அதுபோல மனிதனிலும் மூன்று வகை.

1. பாதிரி பூக்கும் காய்க்காது - பேச்சு உண்டு செயல் கிடையாது.
2. மா பூக்கும் காய்க்கும் - பேச்சு உண்டு செயல் உண்டு.
3. பலா மரம் பூக்காது காய்க்கும் - பேச்சு இல்லை செயல உண்டு.

- மேலோர் மொழி

ஆசிரியர் : ஏய் முட்டாள் என்ன சாக்ஸ் போட்டிருக்க நீ? ஒரு கால்ல நீல சாக்ஸ். இன்னொரு கால்ல கருப்பு சாக்ஸ். அறிவிருக்கா உனக்கு?

மாணவன் : அதான் சார் எனக்கே ஆச்சரியமா இருக்கு. இதே மாதிரி இன்னொரு ஜோடி வேற எங்க வீட்ல இருக்கு. என்ன பண்றதுன்னு தெரியலே.

உறவுப் பெயர்கள்

உறவுப் பெயர்கள் தமிழில் இடம், சாதி, சாதிக்குரிய மண உறவு முறைகள் ஆகியவை காரணமாகப் பல்வேறு வகைப்பட்டு விளங்குகின்றன. பொதுவாகத் திராவிட மொழிப் பேசும் மக்கள் மண உறவுக்குரிய மாற்று உறவுகளைக் கொண்டுள்ளனர். எனவே உறவுமுறைச் சொற்களின் வகையும் பெருக்கமும் தமிழில் மிகுதியாகவே உள்ளன.

உறவுப் பெயர்கள் பொதுவாக விளிப் பெயர்களாகவே விளங்குகின்றன. அம்மை, அப்பன், மாமா, அக்கன், தாத்தன், ஐயன், ஆகிய பெயர்கள் அம்மா, அப்பா, அக்கா, தாத்தா, ஐயா எனவே வழங்கிவருகின்றன. இவற்றுள் அக்காவைக் குறிக்கும் ' அக்கன் ' என்ற பெயர் வழக்கு முற்றிலுமாக மறைந்து போய்விட்டது; கல்வெட்டுகளில் மட்டும் காணப்படுகிறது. ' அண்ணாழ்வி ' என்ற பெயர் வழக்கு அண்ணன், அண்ணாவி என மாறி வழங்குகிறது. சிறுமை அல்லது இளமை என்னும் பொருள் தரும் ' நல் ' என்னும் முன்னொட்டு, தமிழகத்தின் சில இடங்களில் மட்டும் ' நல்லப்பன் ' என்ற பெயரில் வழங்கி வருகிறது. இச்சொல்லுக்குச் ' சிற்றப்பன் ' என்று பொருள். இப்பெயர் நேரிடையாக வழங்காத இடங்களிலும் நடக்க மாட்டாதவன் நல்லப்பன் வீட்டில் பெண் எடுத்தானாம் என்று சொல்லடையாக வழங்கி வருகிறது. அது போலவே தம்+அப்பன்-தமப்பன் என்ற சொல் ' தகப்பன் ' என்று புழக்கத்தில் உள்ளது. தமப்பன் என்ற சொல்லே பெரியாழ்வார் பாசுரத்திலும், கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. தமக்கை என்ற சொல்லையும் தம்+அக்கை என்றே பிரித்துக் கொள்ள வேண்டும்.

அண்ணனைக் குறிக்க இலக்கியங்களில் வழங்கிவரும் ' தமையன் ' என்ற சொல்லையும் இவ்வாறே ' தம்+ஐயன் ' எனப் பிரிக்கலாம். மூத்தவனைக் குறிக்க ' முன் ' என்னும் சொல் இலக்கியங்களில் வழங்கி வருகிறது. அதுபோலவே பின் பிறந்த இளையவனைக் குறிக்க ' பின் ' என்னும் சொல் வழங்கியிருக்க வேண்டும். ' தம் பின் ' என்ற சொல்லே ' தம்பி ' என மருவியிருத்தல் கூடும் என்பர்.

தங்கை என்னும் சொல் அக்கை என்னும் சொல்லின் எதிர்வடிவமாகப் பிறந்திருக்க வேண்டும். இந்த இரு பெயர்களும் ' அச்சி ' என்னும் விகுதி ஏற்று (இடைச்சி, கொடிச்சி, வலைச்சி) அக்கச்சி, தங்கச்சி என வழங்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அக்கச்சி என்னும் வடிவம் கவிதைகளில் மட்டும் வழக்கத்திலிருக்கிறது.

அப்பனின் அப்பனைக் குறிக்க ' மூத்தப்பன் ' என்னும் சொல் வழங்கி வந்திருக்கின்றனது. ' எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ' என்னும் சொல் மலையாளத்தில் தாத்தாவைக் குறிக்கவே வழங்குகிறது. பந்தல் குடியில் கிடைத்த முதல் இராசராசன் காலத்து வட்டெழுத்துக் கல்வெட்டில் தாத்தாவையும் பாட்டியையும் குறிக்க ' முத்தப்பன் ' ' முத்தம்மை ' என்ற சொற்கள் ஆளப்பட்டுள்ளதைக் கல்வெட்டறிஞர் வெ.வேதாசலம் எடுத்துக் காட்டுகிறார். தமிழ் முசுலிம்களில் சிலர் ' மூத்தவாப்பா ' அல்லது ' முத்துவாப்பா ' என்ற சொல்லைத் தாத்தாவைக் குறிக்கப் பயன் படுத்துகின்றனர். அத்தன் என்ற பழந்தமிழ்ச் சொல்லாலும் இவர்களில் சிலர் அப்பாவைக் குறிக்கின்றனர்.

அப்பா என்பதைப் போல விளியாக வரும் இன்னொரு சொல் அம்மா. இதன் மூல வடிவம் அம்மை என்பதுதான். பிறந்த குழந்தையின் அழுகை விளியிலிருந்து (கூப்பாடு) இந்தச் சொல் பிறந்திருக்கவேண்டும். ' அம்மா ' என்ற சொல் ' கேட்பித்தல் ' என்னும் பொருளை உடையது. ' அம்ம கேட்பிக்கும் ' என்று தொல்காப்பியர் கூறுவதும் கூர்ந்து நோக்கத்தக்கது. தாங்கவியலாத வேதனை, வியப்பு, மகிழ்ச்சி ஆகிய இடங்களில் தன்னை மறந்து ஒலிக்கும் அம்மா என்ற சொல் '' என்னைப் பாருங்கள், கேளுங்கள் '' என்ற பொருளில்தான் ஒலிக்கப்படுகின்றது. குழந்தைகள் கேட்பதற்காகப் பாடப்படும் தாலாட்டிலும் மற்றையோர் கேட்பதற்காகப் பாடப்படும் ஒப்பாரி, கதைப்பாடல் ஆகியவற்றிலும் இந்தச் சொல், ' கேளுங்கள் ' என்ற பொருளில்தான் வழங்கி வருகிறது. பொதுவாகப் பெண்ணைப் பரிவோடு அழைக்கும் சொல்லாகவும் இது வழங்கி வருவதைக் காண்கிறோம்.

தாய், தந்தை என இப்பொழுது வழங்கிவரும் சொற்களின் மூல வடிவம் ஆய், அந்தை என்பதே தாய் என்ற சொல்லைத் தாயம் (உரிமை என்பது பொருள்) என்னும் சொல்லோடு தொடர்புப்படுத்தி

உரிமையுடையவள் தாய் எனச் சிலர் விளக்கம் தருகின்றனர். ஆய் என்பதே மூலச் சொல்லாகும். ஆயின் ஆய் (பாட்டி) ஆயா(ய்) என அழைக்கப்படுகிறாள். என் தாய், உன் தாய் என்ற பொருளில் சங்க இலக்கியத்தில் யாய், ஞாய் ஆகிய சொற்களைக் காண்கிறோம்.

தன் ஆய் தாய் ஆனது போலவே, தன் அந்தை தந்தையாகி இருக்கிறது. எந்தை, நுந்தை முதலிய இலக்கியச் சொற்களை என்+அந்தை, நும்+அந்தை என்றே பிரித்துக் காணவேண்டும். மரூஉ இலக்கணமாக ஆதன்+தந்தை-ஆந்தை எனக் கொள்ளுவதும் தவறானதாகும். ஆதன் அந்தை எனக் குறிப்பதே சரி.

பழங்குடி மக்களைப் பற்றி ஆராய்ந்த எல். அனந்தகிருஷ்ண ஐயர் தமிழகத்தின் தென்னெல்லைப் பகுதியான பத்மநாபபுரம் பகுதியில் வாழும் மலைவேடன் எனப்படும் பழங்குடி மக்கள், தந்தையை ' அந்தை ' என்றும், பெரியப்பாவை ' வலியந்தை ' என்றும் அழைப்பதைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளார். (The Travancore Tribes & Castes, Vol. I,p,151)

மாமன், மாமி, நாத்தூண் நங்கை என வழங்கும் சொற்களின் மூலச்சொற்களைக் கண்டு பிடிக்க இயலவில்லை. அண்ணன் மனைவி அண்ணியானது போல மாமன் மனைவி மாமி ஆகியிருக்க வேண்டும். அம்மையுடன் பிறந்தவனைக் (தாய் மாமன்) குறிக்கும் சொல்லா ' அம்மான் ' வழங்குகிறது. இச்சொல் இன்றும் நகரத்தார் எனப்படும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களிடம் வழங்கிவருகிறது. ' அத்திம்பேர் ', '' அம்மாஞ்சி ' முதலியன பார்ப்பனர்கள் பயன்படுத்தி வரும் சொற்களாகும். தந்தையுடன் பிறந்தவளான அத்தையின் மகனைக் குறிக்க ' அத்திம்பேர் ' என்ற சொல்லும், அம்மான் மகனைக் குறிக்க ' அம்மாஞ்சி ' என்ற சொல்லும் வழங்கி வருகின்றன. அம்மாஞ்சி என்ற சொல் அம்மான் சேய் என்பதன் திரிபு ஆகும். அத்தையன்பர் என்பதே அத்திம்பேர் எனத் திரிந்ததாகச் சிலர் கருதுகின்றனர்.

மைத்துனன், மைத்துனி என வழங்கும் சொற்கள் மைதுன (பாலியல்) உறவின் அடிப்படையில் வந்ததாகும். ' மைதுன ' என்பது வடமொழி. இச்சொல் கி.பி 10ஆம் நூற்றாண்டில் இராசராசன் கல்வெட்டுகளில் ' நன்மச்சுனன் ' என்றே வழக்குச் சொல்லாக வருகிறது. ' மைத்துனன் நம்பி மதுசூதனன் ' என்று பாலியல் உறவுக்குரிய காதலனைக் குறிக்கிறது. கி.பி 7ஆம் நூற்றாண்டு ஆண்டாள் பாசுரம் மைத்துனி என்ற சொல்லே தென் மாவட்டங்களில் ' மதினி ', ' மயினி ' என வழங்கி வருகிறது. திருவாங்கூர்ப் பழங்குடி மக்களில் சிலரும் இன்றைய மலையாளிகளும் ' மைத்துனன் ' என்பதற்கு மாற்றாக ' அளியன் ' என்ற சொல்லை வழங்கி வருகின்றனர். இதற்குக் ' கனிவுக்கும் அன்புக்கும் உரியவன் ' என்று தமிழ் இலக்கிய மரபினை உணர்ந்தவர்கள் பொருள் கூறுகின்றனர். மைத்துனன் என்பதனைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல்லாக இதனையே கொள்ள முடிகிறது.

நன்றி : அறியப்படாத தமிழகம்

சிந்தித்துப் பேசுங்கள்

பழக்கப்பட்ட சொற்களைச் சிலர் அடிக்கடி யோசிக்காமலேயே பயன்படுத்துவது வழக்கம். அது ஆபத்தில முடியலாம். வகுப்பறையில் மாணவர்களை அமைதியாகப் படிக்கச் சொல்லிவிட்டு நான் கட்டுரை நோட்டு திருத்திக் கொண்டிருந்தேன். மாணவர்கள் ஏதாவது பேசும் சப்தம் கேட்டால் டேய் நான் ஒருத்தன் இங்க இருக்கேன் என்று ஞாபகப்படுத்துவேன். இது பழக்கம். ஒருமுறை இரண்டு மாணவர்கள் சண்டை போடுகிற சத்தம் கேட்டதும் நிமிர்ந்து பார்க்காமலேயே '' டேய் இங்க நான் ஒருத்தன் இருக்கேன். ஞாபகம் இருக்கட்டும் '' என்றேன். வகுப்பே கொல்லென்று சிரித்து விட்டது. '' ஏண்டா சிரிக்கிறீங்க '' என்றேன். '' வேண்டாம் சார் சொன்னா வருத்தப்படுவீங்க '' என்றார்கள் மாணவர்கள். '' சொல்லுடா '' என்று கிளாஸ் லீடரை அதட்டினேன். கிளாஸ்லீடர் எழுந்து இவன் அவனைப் பார்த்து ' நீ ஒரு மடையன் என்று திட்டினான் சார். பதிலுக்கு அவன் போடா நீ தான் மடையன் அப்படினான். நீ மடையன் நீ மடையன்னு இரண்டு பேரும் சண்டை போடும்போது நீங்க நடுவுல நான் ஒருத்தன் இங்க இருக்கிறேன்னு அவங்களுக்குப் போட்டியா வந்துட்டீங்க சார் ' அப்படினான். ஆஹா யோசிக்காமலேயே பழக்கத்தால ஒன்றைச் சொல்லுவது எத்தனை பெரிய தவறு என்று எனக்குப் புரிந்தது.

– சொன்னவர் : புலவர் இரா. சண்முகவடிவேலு

வரலாறு காணாத மலிவு விலை விற்பனை தீபாவளி இதழ் தமிழர் தகவலை எதிர்பாருங்கள் !

தமிழ் நாட்டைச் சேர்ந்த

இசைப்பேரரசி

திருமதி. மீனாட்சி சீறினிவாசன்

அவர்கள் இந்த மாதம் 8ம் தேதி லண்டனுக்கு வருகை தர உள்ளார்கள். 15ம் தேதி நடைபெறும் ஒரு நாட்டிய நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுகிறார். இவர் கர்நாடக இசை தெய்வீகப்பாடல்களை சிறந்த முறையில் பாடுகிறார். இவருடைய நிகழ்ச்சிகள் இலண்டன் வாழ் மக்களுக்கு பயனுள்ளதாக அமையும்





வயதை மறக்க வைத்த வினாடிகள்

மாவீரன் நெப்போலியன் ஒவ்வொரு நாடாக ஜெயித்துக் கொண்டிருந்தபோது இத்தாலி மீதும் படையெடுத்து வென்றான். அந்த நாட்டு ராணுவ தளபதிகளில் ஒருவரைப் பார்த்து, ' நீங்கள் எத்தனை காலமாக ராணுவத்தில் இருக்கிறீர்கள் ? ' என்று கேட்டான்.

அவர் ஒரு குறிப்பிட்ட மன்னரின் பெயரைச் சொல்லி அப்போதிலிருந்து தளபதியாக இருந்து வருவதாக சொன்னார்.

' அடேயப்பா ! அப்படியானால் உங்களுக்கு எழுபது வயதுக்கு மேல் இருக்குமே ? ' என்று நெப்போலியன் ஆச்சரியப்பட்டான்.

' இருக்கலாம். ' என்றார் இத்தாலிய தளபதி.

' என்ன. இருக்கலாம் என்று உத்தேசமாக சொல்லுகிறீர்கள்? உங்கள் பிறந்த தேதியை வைத்து வயதைக் கணக்கிட வேண்டியதுதானே? ' என்றான் நெப்போலியன்

' இல்லை. நான் என் வயதைக் கணக்கிட்டதே கிடையாது. என் சட்டைகளைக் கணக்கெடுப்பேன். என் பணத்தைக் கணக்கெடுப்பேன். என் குதிரைகளை கணக்கெடுப்பேன். ஆனால் என் வயதைக் கணக்கிட்டதில்லை. ஏனெனில் பொருள்களையும் உடைமைகளையும் யாரேனும் திருடிக் கொண்டு போக முடியும். வயதை யாராலும் திருடிக்கொண்டு போக முடியாது. ' என்று பதிலளித்தார் அந்தத் தளபதி.

இந்த மனிதர் வெறும் தளபதி அல்ல. சிறந்த ஞானி என்று உணர்ந்த நெப்போலியன் அவரை மரியாதையுடன் ஊருக்கு அனுப்பி வைத்தான்.

Euro Travels
&
Tours Ltd
111-B Loampit Vale, Lewisham
London SE13
Tel : 0208 465 9666
Fax : 0208 465 9888
தமிழில் தொடர்புகட்கு :
தி. அருள்தாஸ்

புதிய பொலிவுடன் லூசியத்தில்
கற்பகம்
36, Loampit Hill, Lewisham London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810
ஞாயிறு தோறும் உடன் பங்கு
ஆட்டிறைச்சி
சகலவிதமான மரக்கறி
வகைகள் பழவகைகள்
உட்பட சகல தேவைகளுக்கும்
நாடவேண்டியஒரே இடம்
Katpagam
துரிதப் பணமாற்றுச் சேவை
ரஞ்சன் - இலண்டன்


Everest
Curry King
Sea Food &
Vegetarian Specialist
Breakfast
Lunch
Dinner
24 Loampit Hall, Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

VIDEO & AUDIO
14 Lompait Hill, Lewisham London SE13
Tamil, Malayalam
Hindi, Telugu Films
Tele Dramas Devotional
Carnatic, Classical Cd's
Tamil Magazines
News Papers, Phone Cards
புதிய நிர்வாகத்தின் கீழ்
Maharasie Jewellers
122 Loampit Vale
Lewisham
London SE13 7SN
Tel :020 8691 8888

ஐப்பசி மாதப்பலன் (அக்டோபர் 15 - நவம்பர் 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

மேடம் மேதாவிகளே திடீர்ப் பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, கணவன் மனைவிக்குள் அன்யோன்யம், வழக்கில் வெற்றி, அரசாங்கத்தால் அதிர்ஷ்டம் உண்டாகும். வீண் வதந்திகள் விலகும். முன் கோபம் வந்து போகும். மாதத்தின் மையப் பகுதியிலிருந்து எளிதாக வெற்றி கிட்டும். வியாபாரம் லாபம் தரும். உத்யோகத்தில் மதிப்பு கூடும். கல்யாணம் சிறப்பாக நடக்கும். பிள்ளைகளால் புகழடைவீர்கள். எங்கும் எதிலும் வெற்றியடையும் மாதமிது.

இடபம் உழைப்பாளிகளே! குடும்பத்தில் வாக்குவாதம் விலகும். மருத்துவச் செலவுகள் குறையும். தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. வாகனச் செலவு, வீடு பராமரிப்பு செலவுகள் குறையும். அரசால் ஆதாயம் உண்டு. பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் தெரியும். கல்யாணப் பேச்சு வார்த்தை சுமூகமாக முடியும். வியாபாரத்தில் இருந்த நட்டங்கள் குறையும். உத்யோகத்தில் சம்பளம் கூடும். இடர்பாடுகளைத் தாண்டி வெல்லும் மாதமிது.

மிதுனம் மிதவாதிகளே! கொஞ்சம் உடல்நலனில் கவனம் தேவை. சகோதர வகையில் மனைவி வழியில் சிக்கல்கள் வந்து போகும். கோபம் குறைக்கவும். வெளி உணவுகளைத் தவிர்க்கவும். சிறு சிறு வாகன விபத்துகள் வந்து போகும். வியாபாரத்தில் புது முதலீடுகள் பார்த்து செய்வது நல்லது. உத்யோகத்தில் வேலைப்பளு குறையும். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். தெய்வீகத்தால் தெளிவு பெறும் மாதமிது.

கடகம் கலகலப்பானவர்களே! உங்களின் எதிர்பார்ப்புகள் உடனே நிறைவேறும். குடும்பத்தில் சிக்கல்கள் நீங்கும். ஆடை, ஆபரணம் சேரும். சகோதர வகையில் உதவிகள் உண்டு. வேலை கிடைக்கும். செவ்வாய் தோஷம் விலகி சந்தோசமாக திருமணம் நடக்கும். வியாபாரத்தில் எதிர்ப்புகள் குறையும். உத்யோகத்தில் மூத்த அதிகாரி உதவுவார். பிள்ளைகளின் உடல்நலன், பழக்க வழக்கங்களை கண்காணிப்பது நல்லது.

சிம்மம் நிர்வாகிகளே! பேச்சில் முதிர்ச்சி வெடிக்கும். பணம் எதிர்பார்த்தபடி வரும். பழைய கடன் தீரும். ஆடை, அணிகலன் வாங்குவீர்கள். வாகன வசதி பெருகும். உடன்பிறந்தவர்களால் அனுகூலம் உண்டு. சொந்த ஊரிலிருந்து நல்ல செய்திகள் தேடி வரும். வியாபாரம் கூடு பிடிக்கும். உத்யோகத்தில் சற்று நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். புது நண்பர்களால் உற்சாகமடையும் மாதமிது.

கன்னி விடகவிகளே! மந்தம், மறதி, உடல்வலி நீங்கும். சமயோசிதமாகப் பேசி காரியத்தை முடிப்பீர்கள். மின்னனு சாதனங்கள் வாங்குவீர்கள். வாகனத் தொந்தரவு நீங்கும். புண்ணிய ஸ்தலங்கள் செல்வீர்கள். வியாபாரத்தில் புதுத் திட்டங்களால் லாபம் அடைவீர்கள். உத்யோகத்தில் நெருக்கடி நீங்கும். புது வேலை கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்வீர்கள். எதிலும் ஏற்றம் பெறும் மாதமிது.

துலாம் நீதிமான்களே! தடைகள் நீங்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சகோதர வகையிலிருந்த அலைச்சல் குறையும். எதிர்ப்புகள் நீங்கும். வாகனம் வாங்குவீர்கள். பணத்தட்டுப்பாடு நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். புது பங்குதாரர்களை சேர்ப்பீர்கள். உத்யோகத்தில் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். உற்சாகம் ஊற்றெடுக்கும் மாதமிது.

விருச்சிகம் சத்தியவான்களே! குழப்பம் நீங்கும். மனத் தெளிவு ஏற்படும். வசதி, வாய்ப்புகள் பெருகும். ஆடை, அணிகலன் சேரும். உறவினர்கள் தேடி வருவார்கள். பிள்ளை பாக்யம் உண்டாகும். திடீர்ப்பயணங்கள் அதிகரிக்கும். அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டியவற்றை உடனே செலுத்தி விடுவது நல்லது. உத்யோகம் வேலைப்பளு கூடும். வியாபாரம் லாபம் தரும். சுப நிகழ்ச்சிகள் நடக்கும் மாதமிது.

தனுசு தரமறிபவர்களே! தாமதமான காரியங்கள் உடனே முடியும். பணம் வந்து சேரும். கோபம் தணியும். அரசால் அனுகூலம் உண்டு. புது நண்பர்கள் உதவுவார்கள். வேலை கிடைக்கும். அன்னிய தேசப் பயணங்களும் அதிகரிக்கும். உத்யோகத்தில் சம்பளம் கூடும். உயர்வை எதிர்பார்க்கலாம். நூதனப் பொருட்கள் வந்து சேரும் மாதமிது.

மகரம் மானம் மிக்கவர்களே! உடல்நலம் சீராகும். எதிர்பார்த்தபடி பணம் வந்து கடனைப் பைசல் செய்வீர்கள். எதிர்ப்புகள் அடங்கும். வாகனம் வாங்குவீர்கள். புது வேலை கிடைக்கும். உறவினர்களின் ஆதரவு பெருகும். உத்யோகத்தில் முதலிடம் பிடிப்பீர்கள். பிள்ளைகளின் தேவைகளைப்பூர்த்தி செய்வீர்கள். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். அரசால் அனுகூலம் உண்டு. தடைகள் உடைபடும் மாதமிது.

கும்பம் கொடையாளிகளே! பரபரப்பாக வலம் வருவீர்கள்! எதிர்பார்ப்புகள் வெற்றியடையும். குல தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். உடல்நலம் சீராகும். கௌரவப் பதவித் தேடி வரும். உத்யோகத்தில் கூடுதல் பொறுப்புகள் தேடி வரும். வியாபாரத்தில் சரக்குகள் விற்றுத் தீரும். நண்பர்கள், உறவினர்களிடையே மதிப்பு கூடும். பிள்ளைகளால்செலவுண்டு. சொத்து வாங்கும் மாதமிது.

மீனம் யதார்த்தவாதிகளே! உங்களின் மனோபலம் கூடும். குழப்பத்திலிருந்து விடுபடுவீர்கள். பணப்புழக்கம் அதிகமானாலும் சேமிக்க முடியாது. ஆனால் சொத்து சேர்க்கை உண்டு. ஆன்மீக உணர்வு அதிகமாகும். வியாபாரத்தில் நல்ல லாபம் உண்டு. பங்குதாரர்களை மாற்றுவீர்கள். உத்யோகத்தில் புது பொறுப்புகள் தேடி வரும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. நிம்மதிப் பெருகும் மாதமிது.

WEST CROYDON-ல்

Best Food



மலிந்த விலையில்
நிறைந்த
பொருட்கள்

259 - 261, London Road
West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269 Fax : 020 8686 4577

HARROW-வில்

Best Food

249 Northolt Road Harrow
Middlesex HA2 8HR Tel : 020 8423 9933

Tharani Jewellwery



54 Ealing Road Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777

HOUNSLOW-வில்

Best Food

364 - 366, Bath Road Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002 Fax : 020 8570 2323



மலிந்த விலையில்
நிறைந்த
பொருட்கள்

STARR ESTATES LIMITED

ESTATE AGENS · VALUERS · SURVEYORS
PROPERTY CONSULTANTS

- Sales
- Lettings
- Property Management
- Surveyors
- Valuations
- Mortgages
- Re-Mortgages
- Commercial Loans
- Buildings & Contents Insurance
- Life Insurance

Advice and assistance on purchase of investment abroad including Europe, Middle East (Dubai) and Far East

Please call us with your requirements
ADVICE ON FINANCIAL SERVICES PROVIDED BY QUALIFIED ADVISORS

CENTRAL PARADE
Station Road Harrow Middlesex
HA1 2TW

Tel : 020 8427 5328
Mob : 07956 543 044
Fax : 020 8863 5705
Email : info@starrestatesltd.co.uk
Web : www.starrestatesltd.co.uk

இந்திரா செளந்தியன் சட்டத்தரணிகள்

1 Central Parade, Station Road, Harrow,
Middlesex HA1 2TW

IMMIGRATION

குடிவரவு தஞ்சம் கோருவோர் விண்ணப்பம் (asylum)

கல்வி /தொழில் / உயரிர்தொழில்நுட்பம்
(work permits / HSMP / SEGS / SBS)

வியாபாரப்புலம்பெயர்தல் (Business / innovator / investor)

பிரித்தானிய பிரஜாதாவுரிமை

பிரித்தானிய – இலங்கை இரட்டை பிரஜாவுரிமை!
(Dual citizenship)

திருமண அனுமதி விண்ணப்பம்

ஐரோப்பியர்களின் இருப்பிட விண்ணப்பம், மற்றும்

பிரித்தானியாவில் உறவின அகதிகள் Sponsor

PROPERTY

கடை / வீடு வாங்கல், விற்றல்

வீடு–கடை உரிமையாளர்– குடியிருப்பாளர் பிணக்குகள்

வியாபாரஸ்தாபன குத்தகை On & Off licence

வியாபார பிணக்குகள் – ஒப்பந்தங்கள்
Business disputes & All types of Agreements

கம்பனி உருவாக்கம் – பிணக்குகள் –
பாங்ரப்ட் (Bankruptcy)

சிவில் வழக்குகள்

குடும்பம் (Family) – தொழில் பிணக்குகள் (Employment)

உயில் எழுதுதல்

Charity & Trust Related Work

Intellectual Property / Information Technology

வியாபார இலச்சினை (Logo / Trade Mark)

எழுத்தாக்கம் – இசையாக்கம் (Copy rights)

வெப்சைட் – கொம்ப்யுட்டர்

விஞ்ஞான கண்டுபிடிப்புகள் (Patents)

.....பதிவுசெய்தல்

Tel : 0208 427 3303 **Fax : 0208 427 3313**



திருமண அறிவிப்பு

எங்கள் இளைய மகன் பாரதிதாசனுக்கும் தேனியைச் சேர்ந்த திருவாளர்கள் அரங்கராசன் – சுமதி ஆகியோரின் மகள் வித்யாவிற்கும் 16.09.2005 அன்று, சென்னையில், சாதி மறுப்பு – சுயமரியாதைத் திருமணம் எளிமையான முறையில் நடந்தேறியது என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

– கூடம் வீராண்டியன்
வீ. வசந்தா

திருமண சேவை

உண்மை வெறும் புகழ்ச்சியல்ல ! திருமண ஆற்றுப்படுத்துநர், சுயதெரிவு முறை முன்னோடி குறும்பசிட்டியூர் மாயெழ வேல் அமுதன் ஒப்பேற்றிய திருமணங்களுள் ஒன்றே ஒன்றைத் தவிர அனைத்தும் திருப்திகரமான திருமணங்களே! வேல் அமுதனின் திருமணங்கள் திரும்பிகரமாக அமைவதின் இரகசியம் (1) அவதானமான சுயதெரிவு (2) சோதிடப் பொருத்த ஆய்வு (3) முறையாக முழுமையான விசாரணை (4) மணமக்கள் நேரில் சந்திப்பு ஆகியவை உள்ளடங்கிய சீரமைக்கப்பட்ட அமைப்பொழுங்கே

உங்கள் மக்களின் திருமணமும் திருப்திகரமாக அமைய நீங்களோ உங்கள் பிரதிநிதியோ வேல் அமுதனைச் சந்திக்க ! சந்திப்பு மிக அவசியம் ! சந்திப்பு முன்னேற்பாடு ஒழுங்குமுறையில் மாத்திரம் !

மேலதிக விவரங்களை விசாரித்தறிய

பொதுவிடுமுறை நாட்கள் தவிர்த்த
திங்கள், புதன், வியாழன்,
வெள்ளிக் கிழமை நாட்களில்
இலங்கை நகரம் :
மாலை 4.30 – 8.30 வரையான நேர காலத்துள்
வேல் அமுதனுடன் தொடர்பு கொள்க !
தொலைபேசி : 94 112 360486
தொலைநகல் : 94 114 514 396

முகவரி
Reputed Marriage Facilitator
Kurampasiddyoor Mayelu Vel Amuthan
8/3/3 Metro Apartment
(Opposite Wellavotte Police, Via 33rd Lane)
55th Lane, Colombo - 06, Sri Lanka

ஒரு பித்தலாட்டம் : தமிழர்கள் ஒரு தேசிய இனம் அல்ல. அவர்களுக்கு தனியான தாயகம் ஏதும் இலங்கைத் தீவில் இல்லை. அவர்களுக்கு சுய நிர்ணய உரிமை என்று எதுவும் கிடையாது. எந்தத் தீர்வும் ஒற்றையாட்சி முறைக்குள்தான் பரீட்சிக்கப்பட முடியும். ஆயுதக்களைவோடுதான் புலிகளுடம் வேச்சு, என்பன போன்ற சாத்தியப்பாடற்ற, யதார்த்த பூர்வமற்ற, விபரீதமான அம்சங்களை எழுத்தில் ஒப்புக்கொண்டு இந்தக் கருத்து நிலைப்பாட்டுடன், இதுவரை தென் இலங்கையில் பல்வேறு துண்டுகளாகச் சிதறிக்கிடந்த பேரினவாதிகளை தட்டி விழிக்கச்செய்து, கட்டி எழுப்பி, தன்னை மையமாக வைத்து ஒன்றுபடுத்தி தூக்கி நிறுத்துகிறார் மகிந்த ராஜபக்ஸ. அமைதித்தீர்வுக்கான வாய்ப்புகளை அடியோடு அழிக்கும் விடயங்களின் அடிப்படையில் பேரினவாதிகளை ஐக்கியப்பட வைக்கும் பிரதமர், தீர்வுக்கு வசதியாக பெரும்பான்மையினரை ஒன்றுபடுத்தி இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர வைக்கிறேன் என அதற்கு விளக்கம் கூற முற்படுவது, குளிக்கப்போய் சேறு பூசும் வேலையன்றி வேறென்ன?

(சுடர் ஒளி ஆசிரியத் தலையங்கம்)

கோடீசுவரின் மறுபிறவி : இந்தியாவில் 1975ம் ஆண்டு நடத்தப்பட்ட அவசரக்காலக் கொடுமைகளுக்கு 1980ம் ஆண்டு பிரதமர் இந்திரா மன்னிப்புக் கேட்டார். 1984ம் ஆண்டு நடைபெற்ற சீக்கியர்கள் படுகொலை நிகழ்ச்சிக்கு 2005ம் ஆண்டு பிரதமர் மன்மோகன்சிங் மன்னிப்புக் கேட்டார். 1989ம் ஆண்டு இலங்கை சென்ற இந்திய அமைதிப்படை செய்த அட்டூழியங்களுக்கு யார் எப்போது மன்னிப்புக் கேட்பார்கள்? 1989ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 வரையுள்ள மூன்று நாட்களிலும் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய படுகொலைகள் வரலாறு காணாத துயர நிகழ்ச்சி.

இந்திய இராணுவ சிப்பாய்களின் வெறிக்கு இந்தியத் தலைவர்களின் படங்கள் கூடத் தப்பவில்லை. நெடியகாடு என்னும் பகுதியில் கணபதி படிப்பகம் என்ற ஒன்று உள்ளது. அதில் ஐந்து அடி உயரமான மகாத்மா காந்தியின் உருவப்படம் தொங்கவிடப் பட்டிருந்தது. இந்தியச் சிப்பாய்கள் அந்தப் படிப்பகத்தின் கதவை உடைத்து உள்ளே புகுந்து தங்கள் தேசத் தந்தையின் படத்தையும் உடைத்து எரித்துவிட்டுச் சென்றார்கள். காந்தி அடிகளின் எரிந்து கிடந்த அலங்கோலமான படத்தை நானும் பார்த்தேன். கோட்சே மறுபிறவி எடுத்து வந்து காந்தியின் படத்தைக் கூட விட்டு வைக்கவில்லை

(தலைவர் நெடுமாறன் பேச்சு)

இது சிறுவர் பிரச்சினை இல்லையா ? : .....இதுதவிர இலங்கையில் பல சிங்களக் கிராமங்களில் நடக்கும் சம்பவம், சின்னஞ்சிறு குழந்தைகளை பிக்குவாக விகாரைகளுக்கு தாரை வார்த்துக் கொடுப்பது. இவர்களில் பெரும்பாலானவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் 4 வயது 5 வயது நிரம்பிய பாலகர்கள். பல பின்தங்கிய கிராமங்களில் வறுமை காரணமாக இந்தச் சிறுவர்களை பிக்குவாக விகாரைகளில் இணைக்கின்றார்கள். இது கூடச் சிறுவர் உரிமை மீறலே! சிங்கள அரசு என்பதற்காகவும், பௌத்த மதத்தைக் காக்க வேண்டும் என்பதற்காகவும் அரசு இவற்றை கண்டும் காணாததும்போல இருக்கும் போது 14, 15 வயதில் சிறுவர் என்று முத்திரையுடன் போராடப் போவதில் தவறுகள் இருப்பதாக எந்த விடுதலை வரலாறுகளும் சொல்லவில்லை.

எனினும் யுனிசெவ் அமைப்பு தனது அறிக்கைகள் தொடர்பான உண்மைத்தன்மையினை வெளிப்படுத்த முனைய வேண்டும். தமிழர் பிரதேசம் என்பது ஒரு காலத்தில் அமுல்படுத்தப்படுமாக இருப்பின் அங்கு அமெரிக்க சார்பு நிறுவனங்களுக்கு இடமில்லாத நிலையையே இவர்களது செயற்பாடுகள் இட்டுச்செல்லும். எனவே விடுதலைப் போராட்களை மதிப்பதற்கு இவர்கள் முயற்சி செய்ய வேண்டியது மிக அவசியம். ஓர் விடுதலை இயக்கத்துக்கும் ஓர் பயங்கரவாத இயக்கத்துக்கும் உள்ள வித்தியாசத்தை யாவரும் உணர்ந்து கொள்ளுதல் மிக மிக அவசியம்

(உதயா – தினக்குரல்)

வெளிவரும் உண்மைகள் : 1065ல் ரோகண விஜே வீரவுடன் இணைந்து ஜே.வி.பியை உருவாக்கிய பெருமை எனக்கு உண்டு. எனது சகோதரியின் கணவன் என்ற முறையில் அல்ல பல்கலைக் கழகத்திலேயே எனக்கும் ரோகண விஜே வீரவுக்கும் நட்பு ஏற்பட்டது. முதலாளித்துவ ஆட்சியாளர்களின் கோரப்பிடியில் இருந்து நாட்டு மக்களை விடுவிக்க வேண்டும் என்ற நோக்குடனேயே ஜே.வி.பியை உருவாக்கினோம். எங்களுடைய சொந்த சொத்து சுகங்களையும் கட்சிக்காக இழந்தோம். 9 வருடங்கள் சிறைத் தண்டனையும் சித்தரவதைகளையும் அனுபவித்தோம். உண்மையான ஜே.வி.பி இனமொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. தலைவரின் கொலைக்குப் பின் மறைந்து வாழ நேரிட்டது. நாம் வெளிவர முடியவில்லை. தலைவரின் மறைவுக்குப்பின் கட்சிக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் சொத்துக்களையும், தங்கத்தையும் சுருட்டிக்கொண்ட சோமவன்ச அமரசிங்கவும் அவரது சகாக்களும் ஜே.வி.பி.யை இனவாதப் போக்குடைய கட்சியாக திரை திருப்பிவிட்டனர். இவர்கள் முதலாளித்துவவாதிகளின் கைக்கூலிகளாக மாறிப் பல கொலைகளையும் செய்துள்ளனர். ஜனாதிபதியின் கணவர் விஜே குமாரணதுங்க எனது நண்பர். அவரைக் கொலை செய்தவர் சோமவன்ஸ அமரசிங்க. அதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. சோமவன்ஸவும், விமல் வீரவன்ஸவும் தம் குடும்பத்துக்குச் சொத்துச் சேர்ப்பதில் குறியோடு இருக்கின்றனர். வேறு கொள்கையோ நோக்கமோ அவர்களிடம் இல்லை.

(டாக்டர் சுபாஸ் சந்திர பொன்னண்டோ பேச்சு)

' தாஜா 'க்கள் தாராளம் : மூன்று வருடங்களுக்கு மேலாக நீடித்துவரும் ஒரு போர் நிறுத்தச் சூழலை பின்தளமாகக் கொண்டுதான் இத்தேர்தல் நடைபெறவுள்ளது. பொதுவாக சிறிலங்காவின் தேர்தலைப் பொறுத்த வரையில் ஈழத் தமிழ் மக்கள், மலையக மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் ஆகியோரது வாக்குகள் வேட்பாளரின் வெற்றியைத் தீர்மானிப்பதில் நிர்ணயகரமான பாத்திரத்தை ஆற்றி வந்திருக்கிறது. இந்த மூன்று சமூகங்களும் தீர்க்கமான முடிவு எடுப்பின் சிங்களத்தின் தேர்தல் கேள்விக்குள்ளாகி விடும். இதன் காரணமாகத்தான் சிங்கள ஆட்சியாளர்கள் தேர்தல் காலத்தல் சில ' தாஜா ' விளையாட்டுகளை காட்டுவதும், ஆனால் நாம் வெறும் தாஜாக்களின் காலத்தை இப்போது கடத்திவிட முடியாது. தந்திரோபாயமான முறையில் இத்தேர்தலை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு ஏதும் இருக்கிறதா? இதுபற்றி நமது தேசியத்தலைமை என்ன முடிவெடுக்கப் போகிறது? இவைகள்தான் இன்று நம்முன் உள்ள கேள்விகளாகும்.

(யதீந்திரா – தினக்குரல்)

தெளிவு : ஜனாதிபதி நியூயோர்க்கில் ஐ.நா. பொதுச் சபையிலும், மற்றொரு வைபவத்திலும் உரையாற்றும்போது தெரிவித்துள்ள இன நெருக்கடித் தீர்வுக்கான சமஷ்டி பற்றிய நிலைப்பாடு ஆரோக்கியமானதாகக் காணப்படுகிறது. ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வுதான் சாத்தியப்படக் கூடியது என்று அவர் தெரிவித்துள்ளார். ஒற்றையாட்சி முறையில் தீர்வு என்று செயற்பட முனைந்தால் மீண்டும் நாட்டில் போர் ஒன்றுக்கே முகம் கொடுக்க நேரிடும். ஒற்றை ஆட்சி மூலமான தீர்வு என்பது பகற்கனவுதான்.

(ரணில் விக்கிரமசிங்க – ஜனாதிபதி வேட்பாளர்)

இலங்கை ஒரு நாடா ? : இலங்கை என்பது ஒரு நாடல்ல. மாறாக ஒரு தீவு. இத்தீவில் பல்வேறு திட்டவட்டமான எல்லைப் பரப்புகளில் கண்டிய சிங்களவரும், கரையோர சிங்களவர்களும், தமிழர்களும் தமது மொழி, பண்பாடு, நாகரீகம், வாழ்வியல் முறை ஆகியவற்றைப் பேணிக்காத்து வருகிறார்கள். இவர்கள் தம் தனித்துவத்தை முற்றாக இழந்து ஒன்றாக மாற வேண்டும் என எண்ணுபவர்கள் பொறுப்பற்றவர்கள் (Rashmen) என்று 1926ல் SWRD பண்டார நாயக்கா யாழ்ப்பாணக் கல்லூரியில் நிகழ்த்திய உரையை நினைவுபடுத்துகிறேன். எனவே நாம் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் பயின்ற மெத்தப்படித்த மேதாவி பண்டார நாயக்க ஏற்றதைத்தான் நாங்கள நினைவுப்படுத்துகின்றோம். இதை உணராத நிலையில் அவரின் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அன்று எம் மீது வழக்குத் தொடுத்தது எள்ளி நகையாடத்தக்கது.

(மா.க. ஈழ வேந்தன் நா. உ)

தெரிந்து வினையாடல்

வழிபடு தெய்வங்கள் ஆயிரம் இருந்திட
வாதாபி கணபதியென புதிய தெய்வத்தையும்

அழைத்த வந்து உபரியாக இணைத்துக் கொண்டோம்.
அதனால்தான் அரிமாக்கவி பாரதி ஆத்திரங் கொண்டு,

'' ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் '' என அர்ச்சனை செய்தார்.

வாதாபி கணபதி, இங்கு வந்துற்றது எப்படி ?
வரலாறு அதற்கென ஒன்றுண்டு : இப்படி !

ஆயிரம் ஆண்டின் முன்னே
அழகு நகர்க் காஞ்சியைத்

தலைநகராய்க் கொண்டு
தடந்தோள் பல்லவனாம்,

மகேந்திர வர்மன் மகுடம் புனைந்து
மாட்சி நிறை ஆட்சி நடத்திய போது

வாதாபி மன்னன் புலிகேசி யென்பான்
வலுவில் போர் தொடுத்து வளைத்தான் காஞ்சியை !

வாகை சூடிய அந்த வடதிசை வேங்கையை
தோகையிழந்த மயிலாய் ஆக்கிடுவேன் என்று

மகேந்திரன் மைந்தன் நரசிம்மன் என்பான்
காஞ்சிப் படையை களத்தில் இறக்கினான்.

தந்தையிழந்த பல்லவ நாட்டுக் கோட்டைகள் பலவும்
தனயன் பெற்ற வெற்றியின் தங்கப் பதக்கங்களாயின !

சீன யாத்திரீகர் யுவான்சுவாங், காஞ்சியின் சிறப்புக்களை,
சீனத்திலிருந்து காஞ்சிக்கே வந்து சிலாகித்துக் கூறினார்.

இவர்தான் காஞ்சியை '' திராவிடம் '' என்று குறிப்பு தீட்டியவர்.
இங்குவாழ் மக்கள் அன்பால் அறிவால் கொள்கையால்
உயர்தோர் என்றவர்

சீறி விழுந்து பொறாமையினால் காஞ்சியைச்
சீண்டிக் கொண்டேயிருந்த வாதாபி மன்னனை

இறுதிப் போர் நடத்தி இரண்டிலொன்று பார்ப்பதற்கும்,
குருதிப் புனல் நடுவே பல்லவர் கொடி நாட்டுதற்கும்

படை கொண்டு சென்று,
தடை பல கடந்து, பகைவர்

தலை நாண செய்வதற்கும்
தகுதி மிக்க தளபதி தான் யார் என்று ;

தார் வேந்தன் நரசிம்மன் யோசிக்கலானான்.
தஞ்சை வந்த பரஞ்சோதியை
படைத்தலைவனாக்கினான் – அவன்

புலிகேசி மன்னனைப் புறங்காணச் செய்வான் என்றும்,
வாதாபியை வீழ்த்தி வாகை சூடி வருவான் என்றும்

இதனை இதனால் முடிக்குமென்ற குறள்வரிக்கு
இலக்கணமாய்த் திகழ்வானென்றும் புகழ்ந்துரைத்து,

புலியை வீழ்த்த சிங்கத்தை ஏவுதல் போல்
புலிகேசியை எதிர்த்துப் பரஞ்சோதியை அனுப்பினான்.

போரில் புலிகேசி வீழ்ந்து விட்ட காரணத்தால்
புற்றுப் பாம்பாய் சீறிய வாதாபி

பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போயிற்று !
வெற்றி வீரத் தளபதி பரஞ்சோதி,

சுற்றி வரும்போது வாதாபி நகரை ; அவன் கண்ணைப்
பற்றி இழுத்தது கஜமுகம் கொண்டதோர் சிலை ! அதனை

வெற்றிப் பரிசாக பரஞ்சோதி எடுத்து வந்தான் – காஞ்சிக்கு !
வாதாபி கணபதி வந்தவிதம் இப்படித்தான் என்பர் !

இதனை இதனால் இவன் முடிக்குமென்பதை ஆய்ந்த
பலனைப் பரஞ்சோதி வாயிலாகப் பல்லவன் பெற்றான்.

படையை நடத்தி, பகையை வீழ்த்தி, வெற்றிக்
கொடியை உயர்த்தினான் பரஞ்சோதி !

திருக்குறள் வாயிலாக நாமும் இந்தத் தேர்வு
முறையைக் கற்றோம்; தெளிவு மிகப் பெற்றோம் !

'' இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவனகண் விடல் ''

(ஒரு காரியத்தை ஒருவர் எப்படிச் செய்து முடிப்பார்
என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக்
காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.)

அதிகாரம் : 52 குறள் : 517

அவாவறுத்தல் !

நெப்போலியன் உலகம் போற்றிய உன்னதமான ஒரு விடுதலை வீரன். வீரத்துடன் விவேகத்துக்கும் சாதனைக்கும் சரித்திரத்தில் பெயர் பெற்றவன். கோர்சிகாத் தீவில் ஒரு சாதாரணக் குழந்தையாய் எழுந்து, அவன் அன்னையின் நெடுமூச்சை நிவர்த்தி செய்ய நின்று, பிரான்சின் சக்கரவர்த்தியாக உயர்ந்தவன். அவன் பிறப்பு 1769 ஆகஸ்ட் 15ந் தேதி நடந்தது. 16 வயதில் பட்டம் பெற்றுப் 18 வயதில் பிரான்சியப் படையின் பீரங்கிப்படையணிக்குத் தளபதியாகி காலத்தில் அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தியவன். ஐந்து அடி ஒரு அங்குலம் மாத்திரம் உயரமான இந்தக்குள்ள உருவம் உருவாக்கிய சரித்திரம் மகத்துவமானது. துணிவு இவனுடன் கூடவே பிறந்தது. ஆயினும் வேகம் அவனுடன் விளையாடியதால் அந்தத் தற்றுணிவுதான் அவனது ஆசைகளுக்கும் காரணமாயிற்று. ஏனெனில் '' முடியாது என்பது என் அகராதியில் கிடையாது '' என்று சொன்னவன் அவன்.

மக்களால் நேசிக்கப்பட்ட இந்த மாவீரன், அந்த மக்களின் மதிப்பை இழந்தது அந்த ஆசையால்தான். யுத்த வெறியும், அதிகார ஆசையும், மணிமுடிக்கான வேட்கையும் அவன் அவாக்களாயின. அந்த ஆட்சியின் சரித்திரம் சொன்ன இருபது ஆண்டுகள் வெற்றி நாட்களாயினும், யுத்தம் நிறைந்ததும், – இரத்தம் செறிந்ததுமான நாட்களாகத்தான் இருந்தன. அவன் படையெடுப்புகளால் றைன் நதிக்கப்பால் பல நாடுகளின் வரை கோடுகளே அழிந்தன. அதனால் எரிச்சல்களையும் சம்பாதிக்க வேண்டியதாயிற்று.

எகிப்திய களத்தில் அவன் நிகழ்த்திய சாதனை, மத்திய தரைக்கடலைத் தாண்டிப் படை நகர்த்திய தீரம், ஸ்பானியப் புரட்சியை இல்லாதொழித்த வேகம், என்றும் நிலை நிற்கும். அவன் எழுதிய 'கோட் நெப்போலியன்' எனும் புகழ் மிக்க அரசியல் ஆக்கம், மக்களோடு மக்களாகக் கலந்துகொண்டு அவன் ஆற்றிய தொண்டுகள், அவன் அறிமுகப்படுத்திய இலவசக் கல்வித்திட்டம், முடியாட்சியை முறியடித்து குடியாட்சியை நிலைநிறுத்துவானென மக்கள் அவன்மீது கொண்ட நம்பகத் தன்மை, யுத்த காலத்தில் தன் சக வீரர்களைக் கண்ணியமாக நடத்திய விதம் தன் வீரர்களிடம் தன் பாதுகாப்பை ஒப்படைத்துவிட்டு அரைமணிநேரம் களத்தில் குதிரையில் இருந்தவாறே துயில் கொள்ளும் தனித்துவமான விசுவாசம். ஏழைகளிடத்திலும் இளம் சிறார்களிடத்திலும் அவன் காட்டிய பரிவு, எல்லாவற்றுக்கும் மேலாக பிரான்சும், பிரான்சு மக்களும் எவரையும் அடிமை கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் என ஏற்படுத்திய பெருமை என்ற பிரமை என்று அத்தனையையும் அவன் அதிகாரப் பேரவாவினால் அழித்துக் கொண்டதுதான் வரலாற்றின் துரதிஷ்டமான பக்கங்களாகிப் போனது.

களத்தில் தோற்று தன்பிடியில் சிக்கிய ஸ்பானியாவில், தன் தம்பி லூயி நெப்போலியனை ஆட்சியாளனாக அமர்த்தியபோதுதான் அவனுக்கெதிரான மக்கள் எதிர்ப்பு உருவாயிற்று. அது ஒரு சிறிய கலவரமென்று வர்ணித்து, அதை நசிக்கிய விதம், உலக மக்களிடையே அவனுக்கிருந்த கீர்த்தியைக் கீழிறக்கிய முதல் சம்பவமானது ' நெப்போலியனுக்கெதிராகவும் குரலெழுப்பிப் புரட்சி செய்ய முடியும் ' என்பதை நிரூபித்துக் காட்டியது. ஸ்பானியா சென்ஹெலனா தீவில் தன் கடைசி நாட்களைக் கழித்துக்கொண்டிருந்து போது அதற்காக மனம் வருந்தி '' ஸ்பானியப் பிளவே என்னை அழித்தது '' என்று எழுதியிருந்தான்.

தன்னைச் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ளவும், தனது ' போன பார்ட் ' குடும்பத்தை அரச குடும்பமாக (Royal Family) பிரகடனப்படுத்தவும் அவன் அவாக் கொண்டான். அதன் பலன் அவுஸ்திரியாவை அடிமைப்படுத்தி அந்நாட்டின் இளவரசியை பலவந்தமாகத் தன் பட்டத்து ராணி ஆக்கினான். அவள் கடைசி வரை மனநெகிழ்வுடன் இவனுடன் வாழ்ந்ததே இல்லை. தன் இறுதி நாட்களில் சென்ஹலினா தீவிலிருந்து ; தன் குழந்தையையாவது ஒரு முறை காட்டுமாறு விட்ட அந்த கண்ணீரின் வேண்டுகோளைக் கூட அக்காரிகை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள் ' வாட்டர்லூ ' களத்தில் இவன் பெற்ற தோல்வியின் பின்பு இவன் முகத்தை அவள் பார்த்ததே இல்லை என்கிறது வரலாறு. நாட்டை இழப்பதற்கு முன் அவன் வீட்டை இழந்து விட்டிருக்கிறான்; அந்த அதிகார அவாவினால் என்பதுதான் உண்மையானது.

அவனுடைய அவா, உன்னதமான ஒரு காதலை உதாசீனம் செய்திருந்ததுதான். அந்த இறுதிக்கால வீழ்ச்சி ' ஜோசபைன் ' என்ற பெண்ணுக்கு அவன் செய்த மாறாத துரோகம்தான். பீரங்கிப் படையின் தலைவனாக இவன் இருந்த காலத்திலிருந்து இவன் வெற்றிகளுக்குத் துணை நின்றவள் ஜோசபைன். கார்ல்மார்க்கின் ' ஜென்னி 'யைப் போல களங்கமற்ற காதலைப் பொழிந்தவள். அவளை வழியனுப்பும்போது அவள் கொடுத்த ஒவ்வொரு முத்தங்களும் ஒவ்வொரு வெற்றித் திலகங்களாக இவன் வாழ்வில் அமைந்திருந்தன. ஆனாலும் சக்கரவர்த்தியாக ஆசைப்பட்ட நெப்போலியன், தன்னை அரச குடும்பமாக உலக அங்கீகாரம் பெறவேண்டிய அவா மேலீட்டால் தன்னைவிட்டு விலகிப்போகுமாறு கேட்டுக்கொண்டபோது அவள் துடித்த துடிப்புத்தான் இவன் வெற்றித் திலகங்களை வியர்வை கொண்டழித்தன. '' உங்கள் நல்வாழ்வுக்காக நான் எதையும் செய்வேனென்று '' விடைபெற்றுப் போனாள் அப்பெண்.

அப்புறம் நடத்தப்பட்ட அத்தனை போர்களிலும் அவன் தோல்வியடைந்ததாகத்தான் அறிய முடிகின்றது. தன் மனசாட்சிக்கெதிராக – அதிகார ஆசைக்காக அவளுக்குச் செய்த துரோகத்தை எண்ணி அவன் கடைசி நாட்களில் கண்ணீர் விட்டழுதிருக்கிறான். '' என் பிரிய ஜோசபைன் ! நீ என் பக்கத்தில் இருந்திருந்தால் இந்த உலகமே என் காலடியில் இருக்கும். உன்னை அகற்றிய துன்பமே இன்று என்னை அநாதையாகக் கொண்டது '' என அவன் கடைசியாக எழுதிய காதல் கடிதம், அவள் கரமெட்டியபோது அவன் மறைந்து கால் ஆண்டு கழிந்து விட்டது. எனினும் அவனது எண்ணத்துடனேயே கடைசிகாலம்வரை அவள் வாழ்ந்தாள். நெப்போலியனைப் பெற்ற தாயார்கூட அவன் இறந்து மூன்று மாதங்களின்பின்தான் அறிந்திருந்தாள் என்கிறார்கள் ஆசிரியர்கள்.

'' அவன் கல்லறை முன் நின்றபோது இருபது ஆண்டுகள் அவனால் சிந்தவைக்கப்பட்ட இரத்தத்திற்காக இகழ்வதா ! அல்லது அவனது வீரத்துக்காகவும், நற்பணிகளுக்காகவும் புகழ்வதா! என்று புரியவில்லை. கண்ணீர்விடவும் முடியவில்லை – காறி உமிழவும் இயலவில்லை '' என்கிறார் பேரறிஞர் அண்ணா.

ஒருவன் எப்படி விழிப்பாக இருந்தாலும் ஏதேனும் ஒரு வகையில் ஆசை அவனை வஞ்சித்து அகப்படுத்தும். ஆதலின் அதனை அஞ்சியஞ்சி அதற்கு அகப்படாதவாறு காப்பதுதான் அறமாகும் என்கிறார் வள்ளுவர்.

'' அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்பதோரு மவா '' (குறள்)

– கோத்திரன்

அக்டோபர் 22ம் தேதி
முதலாம் ஆண்டு நிறைவில்
அடியெடுத்து வைக்கும்
JK GOLD HOUSE
நிறுவனத்தாருக்கு
எங்கள் பாராட்டினை
தெரிவித்துக் கொள்கிறோம்

தமிழர் தகவல்

Jk Gold House & Fashion House

314-316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677


Mithus Jewellery
322-324 London Road Croydon CRO 2TJ Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792
Diamonds Palace
76 Tooting High Street London SW17 ORN Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814
திருமணத்திற்கு
தேவையான அனைத்து
தங்க நகைகளுக்கும்...